ஸ்ரீ:
ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி எ. பிரமோதூதஹு ஐப்பசிமீ பகுதி ௰.
Vol 7. October & November 1930. **No. 10.**

கம்பர் கடவுள் வாழ்த்து.

(131-ம் பக்கத்தொடர்ச்சி.)

ஆரணியகாண்டம்.

பேதியாதுநிமிர்பேதவுருவம்பிறழ்கிலா
ஓதியோதியுணருந்தோறுமுணர்ச்சியுதவும்
வேதம்வேதியர்விரிஞ்சன்முதலோர்தேரிகிலா
ஆதிதேவரவரேம்மறிவினுக்கறிவரோ.

முன்னுரைத்த வாழ்த்தினால் ஜகச்சரீரியாய் விளங்குகின்ற பரம்பொருளே இராமபிரானென்று விசிஷ்டாத்வைத சமயவுண்மையை விளக்கத் தோற்றுவாய் செய்தார். இவ்வாழ்த்தினால் அந்த விசிஷ்டாத்வைத சமய தத்வத்தை வேதத்தினியல்புரைக்குமுகத்தானுரைத்துத் தம்முடைய வினயத்தைத் தெரிவிக்கிறார்.

(இதன்பொருள்) (காரணாவஸ்தையில்) பேதமில்லாமல் ஏகரூபமாய் (காரியாவஸ்தையில) ஒன்றிற்கொன்று மிக்க பேதமாயிருக்கின்ற சிதசித்துக்களை (சரீரமாக) உடைய ஸ்வரூபத்தைப் பிறழ்ச்சியில்லாமல நன்றாய்ப் பயின்று ஆராயும்போதெல்லாம் உணர்ச்சிக்கு உதவுகின்ற வேதத்தாலும், அவ்வேதத்தைப் பயின்ற வேதியராலும், அதனையுபதேசித்த பிர்ம்மதேவன் முதலிய பெரியோர்களாலும் அறியவொண்ணாத காரணவஸ்துவாகிய இறைவன் எம்மறிவினுக்கறிய வெளியனோ? என்பதாம்.

இனி, இதற்கு விரிவுரை வருமாறு.—

* "தன்னுள்ளே திரைத்தெழும்தரங்கவொண் தடங்கடல், தன்னுள்ளே திரைத்தெழுந்து அடங்குகின்ற தன்மைபோல், நின்னுளே பிறந்திறந்துநிற்பவுமதிரிபவும்,நின்னுள்ளேயடங்குகின்றநீர்மைநின் கண்நின்றதே" என்றும், § "தம:பரேதேவ ஏகீபவதி" "தம: பரேதேவ ஏகீபவதி" என்றும் சொல்லுகிறபடியே சேதனாசேதனங்களெல்லாம் இறைவன் தன்வயினடங்கிய பிரளயகாலத்தில் சேதனாசேதனங்கள அவனிடத்தில்அடங்கியுள்ளனவென்று தோற்ருது ஏகதத்வமேயுளளதென்று சொல்லும்படி யிருக்குமாதலால் பேதியாது என்ருர். பிரளயகாலத்தில் பேதம் தோற்ருமல் இறைவன் தன்வயினடங்கியுள்ள சேதனாசேதனங்கள் சிருஷ்டிகாலத்தில் அவைகளின் பேதம் தெளிவாய்த்தோற்றும். அங்ஙனம் தோற்றும் சேதனாசேதனங்களை இறைவன் தனக்குச் சரீரமாகக் கொண்டுள்ளானென்பார் நிமிர்பேதவுருவம் என்ருர். இதனால், ஸூக்ஷ்ம சிதசித்விசிஷ்டப்பிர்ம்மம் காரணமென்பதும், ஸ்தூலசிதசித் விசிஷ்டப் பிர்ம்மம் காரியமென்பதும் வெளியாயின.

ஆத்மவஸ்து, தேகம் இந்திரியம் மனம் பிராணன் புத்தி என்ற இவற்றைக்காட்டிலும் வேறுபட்டதாய் ஜ்ஞாநாநந்தமயமாய் நித்யமாய் அணுவாயிருக்கும். அசித்து, ஞானமற்றதாய் விகாரங்கட்கு இருப்பிடமாயிருக்கும். இவை ஒன்றற்கொன்று பெரிதும் வேறுபாடுடையனவாதலால் நிமிர்பேத உருவம் என்ருர். நிமிர்பேதவுருவம் என்பதில உருவம் என்பதை இறுதி நிலைத்தீபகமாகக்கொள்க.

---

* இதன்பொருளாவது.— தன்னிடத்திலே கிளர்ந்து பரவுகின்ற அலைகளையுடைத்தாய், வெளுத்தவிசாலமான இடத்தையுடைத்தானகடலானது, காற்று வீசியபோது தனக்குள்ளே கிளர்ந்துலாவி மறுபடியும் ஆரவாரமில்லாமல் அடங்குகின்ற தன்மைபோல, ஸ்தாவர ஜங்கம ரூபமான உலகெல்லாம் உனது ஸ்வரூபத்துக்குள்ளே உனது ஸங்கல்பத்தால் பிறந்து லயமடைந்து உன் ஸ்வரூபத்திற்குள்ளே ஒடுங்குந்தன்மை உன்னிடத்தில்தான் உள்ளது; என்பதாம்.

§ இதன் பொருளாவது.— தம:-பிரகிருதியானது, பரேதேவே-பரமாத்மாவினிடத்தில்; ஏகீபவதி-ஐக்யமடைகிறது; என்பதாம்.

பேதம் என்பது ஈண்டு லக்ஷணையாகப் பேதத்தையுடைய சேதனு சேதனங்களைக்குறித்து நின்றது. உருவம்--பிர்ம்ம ஸ்வரூபம். ஆக, பேதவுருவம் என்பது பேதத்தையுடையவற்றைச் சரீரமாகக் கொண்டுள்ள பிர்ம்மஸ்வரூபம் என்று விரிதலால், இது இரண்டாம் வேற்றுமையுருவும் பயனுமுடன்தொக்கதொகையாம்.

நிமிர்பேதம் பேதியாதிருக்கும் உருவம் எனக்கூட்டி சேதனு சேதனங்களைத் தனக்குச் சரீரமாகக்கொண்டிருந்தும் அவற்றின் விகாரப்பாடுகளொன்றுமில்லாத பிர்ம்மஸ்வரூபம் எனப் பொருள் கொள்ளினும் பொருந்தும். அஃதாவது லயகாலத்தில் அசித்தின் ஸூக்ஷ்மபரிணாமமும், ஆத்மாவின் ஜ்ஞாந சங்கோசமும், சிருஷ்டி காலத்தில் அசித்தின் மஹத்பரிணாமமும், ஜீவனுடைய ஸ்வபாவ வேறுபாடுமின்றி ஏகஸ்வரூபனுயிருக்கிறுனென்பதாம். * "பிணக்கி யாவையும் யாவரும் பிழையாமற் பேதித்தும் பேதியாததோர், கணக்கில் கீர்த்திவெள்ளக் கதிர்ஞானமூர்த்தியினுய்" என்பதும் இங்கறியத்தக்கது.

இனி, பேதியாது நிமிர்பேத உருவம் என்பதற்கு பேதாபேத ஸ்வரூபமென்றும் பொருள் கொள்ளலாம். இன்னும் பேதியாது என்பதற்கு மற்ருேர் வகையாகவும் பொருள் கொள்ளலாம். அஃதாவது.— முன்பு, சிதசித்துக்களைச் சரீரமாகக்கொண்டிருந்தும், அவற்றின் விகாரங்கள் பிர்ம்மத்தைப் பரிசிப்பதில்லையென்று சொல்லப்பட்டது. காரணமாகிய தானே காரியமாகின்றுனுதலால் அவ்வாறுகின்றதனுல் தன்னுடைய ஸ்வரூபத்திற் கேதேனும விகாரங்களுண்டோவென்ருல் அதுவுமில்லையென்ற பொருளைப் பேதியாது என்ற சொல்லுணர்த்துகிறதென்பதாம். இங்கு நிமிர்பேத உருவம் என்பதனுல் விசிஷ்டம் என்பதன்பொருளும், பேதியாது

* இதன் பொருளாவது.— தன்னிடத்தில் பொருந்துவதற்கு நினைவில்லாதஅசேதனங்களையும், நினைவால் பொருந்தாதிருக்கிற சேதனவர்க்கங்களையும் தன்னேடு நாமரூப வேறுபாடில்லாதபடிகலசி, பின் சேதனர்கள் செய்த கருமங்கட்குத்தகுதியாகத் தப்பாதபடி தேவமனுஷ்யாதிபேதத்தைச் செய்தவிடத்திலும், அவற்றின் தோஷம் தனக்குத் தட்டாதபடியிருக்கிற எண்ணிறந்த ஞானஸ்வரூபியாயிருக்கின்றவனே; என்பதாம்.

என்றதனால் அத்வைதம் என்றதன் பொருளும் விளங்குகின்றமை அறிக. * விசிஷ்டாத்வைதமென்ற சொல்லுக்கு எத்தனை பொருளுண்டோ அத்தனை பொருளும் பேதியாது நிமிர்பேத உருவம் என்பதற்கும் சொல்லிக்கொள்க. இப்பதங்கட்கு சிதசித்விசேஷண பிர்ம்மம் என்று பொருள்கொண்டதனால் பிர்ம்மவஸ்து சவிசேஷம் என்பது புலனாம். பிறர் கூறுகிறபடி நிர்விசேஷமென்பதில்லை. செந்தாமரை என்பதில் செம்மை என்னும் விசேஷணமானது மற்றத் தாமரையை வேறுபடுத்தி யுணர்த்தியதுபோல இங்குச்

---

* விசிஷ்டஸ்ய-சேதனாசேதனங்களைச் சரீரமாகவுடையவனது. அத்வைதம்-நிமித்தோபாதான ஸஹகாரிகாரணமாகிய பிறிதொன்றில்லாமை. அஃதாவது தானே நிமித்தகாரணமாயும் உபாதான காரணமாயும் ஸஹகாரி காரணமாயுமிருக்கையாம். நிமித்தகாரணமாவது-காரியரூபேண விஹரிப்பிக்கும் கர்த்ருவஸ்து. அஃதாவது-ஒரு வஸ்துவைக் காரியப்படுத்துகிற கர்த்தாவென்பதாம். மண்பிண்டதைக்குடமாக்குகிற குயவன் நிமித்த காரணமாம். உபாதானகாரணமாவது-காரியரூபேண விஹரிக்கைக்கு யோக்யமானவஸ்து. அஃதாவது— காரியமாதற்குத் தகுதியான பொருள் என்பதாம். குடமாதற்குத்தகுதியான மண்பிண்டம் உபாதானகாரணமாம். ஸஹகாரிகாரணமாவது-காரியரூபேண விஹரிக்கைக்கு உபகரணமான வஸ்து. அஃதாவது— காரியத்தையுண்டுபண்ணுதற்குத் துணையாயிருக்கின்ற கருவியென்பதாம். குடத்தை யுண்டுபண்ணுதற்குத் துணையாயிருக்கின்ற தண்டஞ்சக்கரம் முதலியன ஸஹகாரிகாரணங்களாம். இங்கு அத்வைதம் என்பதற்கு நிமித்தோபாதான ஸஹகாரிகாரணங்களாகிய பிர்ம்ம வஸ்துவில் பிறிதொன்றில்லாமை பொருளென்றால்; முன்னுரைக்கப்பட்ட உதாரணத்தில் நிமித்தகாரணம் குயவனும்; உபாதான காரணம் மண்பிண்டமாயும், ஸஹகாரிகாரணம் தண்டசக்கரம் முதலியனவாயும் இருப்பனபோல இங்கும் மூன்று காரணங்களும் வெவ்வேறாயிருத்தல்வேண்டும். அவ்வாறிருக்க மூன்று காரணங்களும் தானேயாயிருக்கிறானென்பது எப்படிப் பொருந்துமெனின்; மண்பிண்டத்திக்கு அறிவில்லாமையால் தான் குடமாகுதற்குரிய நிமித்தமாக முடியவில்லை. குயவனுக்குக் காரியமாக விஹரிக்கும் சக்தியில்லாமையால்தான் உபாதானமாதற்கு முடியவில்லை. ஆதலால் மண்பிண்டம் குயவனை அபேக்ஷிக்கும்படியும் குயவன் மண்பிண்டத்தை விரும்பும்படியும் நேர்ந்தது. அதனால் காரணங்கள் வெவ்வேறாயின. இங்கு பிர்ம்மவஸ்து ஞானசக்திகளோடு கூடியதாதலால் தானே நிமித்தோபாதான ஸஹகாரிகாரணங்களாயிருப்பதற்கு யாதொரு தடையுமில்லை. இன்னும் விசிஷ்டாத்வைதம் என்பதற்குப் பலவகைப் பொருள்களுமுண்டு.

சிதசித்விசேஷண பிர்ம்மம் என்பதில் சிதசித்விசேஷணம் எதனை வேறுபடுத்துகிறதெனின்; விசேஷணம், பிறிதினியைபு நீக்கிய விசேஷணமென்றும். தன்னோடு இயைபின்மை நீக்கிய விசேஷண மென்றும் இரண்டு வகைப்படும். பிர்ம்மத்திற்குத் தன்னை யொழிந்தவையெல்லாம் விசேஷணமாகவிருப்பதால் இங்குச் சிதசித்துக்களான விசேஷணத்தைப் பிறிதினியைபுநீக்கிய விசேஷணமாகக் கொள்ளாது தன்னோடு இயைபின்மை நீக்கியவிசேஷணமாகக் கொள்க. இதனை இயல்படையென்று சொல்வர்கள். சிதசித்துக்கள், பிர்ம்மத்திற்கு விசேஷணமில்லையென்பதில்லையென்று இவ்விசேஷணம், பிர்ம்மத்தின் இயல்புணர்த்தி நின்றது.

பிறழ்கிலாது—பிறழ்ச்சியில்லாமல். வேதம், பலவகையாகப் பரந்து கிடக்கின்றமையால் அவற்றுள் ஒரு பகுதியை மாத்திரம் கைக்கொண்டு மற்றவற்றிற்கு விரோதமாகப் பொருள்முடிவுகொள்வது பிறழ்ச்சியாம். அங்ஙனங்கொள்ளாது எல்லாப்பொருளிற்கும் முன்பின் விரோதமின்றிப் பொருளுணர வேண்டுமென்பார், பிறழ்கிலாது என்றார். முன்பின் விரோதமின்றிப் பயில்வதும் ஒருகால் இருகால் பயின்றால் பிறழ்கிலாதுணரமுடியாததலால் பலகாலும் பயிலவேண்டுமென்பார், ஓதி ஓதி யென்றார். ஓதியோதி யென்னும் அடுக்கு, பலகால் பயிலவேண்டுமென்னும் பொருட்டு. பிறழ்ச்சியின்றி பல்கால் பயின்று பொருள் முடிவு கொண்டது பொருத்தமாகவிருக்கின்றதாவென்று ஆராயவேண்டு மென்பார், உணருந்தொறுமென்றார். அங்ஙனம் ஆராயவேண்டுவதின் காலப்பன்மை தோன்ற தொறு மென்றார். ஈண்டு உணர்வென்றது ஆராய்ந்தறிதலை. உணர்ச்சியுதவும்—உணர்ச்சிக்கு உதவும். உணர்ச்சிக்கு உதவுதலால் வேதமாயிற்று. உதவும் என்றது ஹேதுகர்ப்பவிசேஷணம். வேதத்தைப்பிறழ்கிலாது ஓதியோதி உணராதபோது உண்மையான பேதாபேதஸ்வரூபத்தை அது தெரிவிக்கமாட்டாது. இதுபற்றியே வேதத்துக்கு மறையென்று பெயர் வழங்குவது மறியலாம்.

ஓதியோதி யுணருந்தொறும உணர்ச்சி யுதவும் வேதம் என்பதற்கு மேன்மேலும் பயிலப்பயில அறிவைத்தருகின்ற வேதம் என்று பொருள் கொள்ளினும் பொருந்தும். "தொட்டனைத்தூறு

மணற்கேணி மாந்தர்க்குக், கற்றனைத்தூறு மறிவு'' என்பதுங் காண்க.

இதனால் வேதம், பேதத்தையும், அபேதத்தையும், பேதாபேதத்தையும் தெரிவித்ததென்பதும்,பிறழ்கிலாது ஒதியோதி யுணருந்தொறும் பேதாபேத ஸ்வரூபத்தை உணர்ச்சிக்குதவு மென்றதனால் பேதாபேத ஸ்வரூபமே தத்வமென்பதும் வெளியாயின.

இவ்வாறு பேதாபேதமாகிய விசிஷ்டாத்வைதமே தத்வமென்று ஒப்புக்கொள்ளாவிட்டால் ஜ்ஞாநமாத்திரமே ப்ரிம்மமென்று சொல்லுகிற சுருதிகட்கும், ஜ்ஞாநத்தையுடையது பிர்ம்மமென்று சொல்லுகிற சுருதிக்கும், சேதநுசேதநேசுவரர்கள் உண்டென்று சொல்லுகிற பேதசுருதிகட்கும், ஜீவப்பிர்ம்ம பேதமில்லை என்று சொல்லுகிற அபேதசுருதிகட்கும், குணமில்லையென்று சொல்லுகிற நிர்க்குண சுருதிகட்கும் பொருள் பொருத்தமாகச் சொல்லுவதற்கியலாது.

விசிஷ்டாத்வைதசமயத்தினர் ஒன்றிற்கொன்றுவ்வாதஇந்தச் சுருதிகட்கு எவ்வாறு பொருள் கூறுகின்றன ரென்றால்; பிர்ம்மத்திற்கு ஞானம் விஞ்சியிருக்கின்றதனுலும், ஸ்வயம்ப்ரகாசமாயிருக்கின்றதனுலும் ஞானம் பிர்ம்மம் என்று சொல்லியதேயன்றி இந்த சுருதி, ஞானமுடையது பிர்ம்மம் என்றுரைப்பதைக் கண்டிப்பதற்கெழவில்லை. பேதசுருதி அபேதசுருதி என்ற இரண்டனுள் பேதசுருதியே பரமார்த்தம். ஆனுல் அபேதசுருதி வீணேவென்னில்; இல்லை. இது, ஜீவனுக்கும் பிர்ம்மத்திற்கும் சரீராத்ம பாவஸம்பந்தமுண்டென்பதை வெளியிடுவதற்காகத் தோன்றியது. ஸகுண சுருதி நிர்க்குணசுருதி என்ற இரண்டனுள் ஸகுணசுருதியே பரமார்த்தம். நிர்க்குணசுருதி பிர்ம்மத்திற்கு ஹேயகுணங்களில்லை என்பதை யுணர்த்துதற் கெழுந்ததேயன்றி, பிர்ம்மத்திற்குக்கல்யாணகுணங்களுண்டென்பதை நிஷேதிக்க வரவில்லை;. என்று இவ்வாறு எல்லாச் சுருதிகட்கும் ஒன்றற்கொன்று விரோதமில்லாமல் பொருள் கூறுகின்றனர்.

''யதாபூதவாதிஹி ஶாஸ்த்ரம்'' ''யதாபூதவாதிஹிசாஸ்த்ரம்'' சாஸ்திரத்தி லுரைத்தவை யெல்லாமுண்மையே என்று சொல்வ

தற்கு விசிஷ்டாத்வைதசமயமே சாலப்பொருத்தமுடையதாகும். இவ்வாறன்றி, சாஸ்திரததிற் சொல்லுகிற ஒரு பகுதியே ஸத்யம். மற்றவையெல்லாம் அஸத்யமென்கிற *வாதியர்கூறுவது விபரீதமா மென்பதுஅவர்களின்சமயக்கருத்தறியவேபுலனுகும். இதுபற்றியே

---

* அதவைதிகள், பேதமற்ற ஞானமாத்திரமே பிர்ம்மம் என்கின்றனர். பேதமும் ஸஜாதீயபேதம் விஜாதீயபேதம் ஸ்வகதபேதம் என்று மூன்று வகையினை யுடையது. இவற்றுள் ஸஜாதீயபேதமாவது—பிர்ம்மத்திற்கும் ஆத்மாவுக்குமுள்ள பேதமாம். விஜாதீயபேதமாவது—பிர்ம்மத்திற்கும் அசேதனத்திற்குமுள்ள பேதமாம். ஸ்வகதபேதமாவது—பிர்ம்மத்திற்கும் அதன் குணஙகட்குமுள்ள பேதமாம். இந்தப் பேதமொன்றுமில்லாததே பிர்ம்மம் என்றதனுல் பிர்ம்மமொன்றே ஸத்யம். அதனின் வேறுனதொன்றில்லை யென்பது தெளிவாம்.

இந்தப் பிர்ம்மம் அவித்யையினுல் மறைக்கப்பட்டு மயக்கமாகிய பேதத்தையனுபவித்துப் பந்தத்தை யடைகிறது. "தத்வமஸி" இத்யாதி வாக்யார்த்தஜ்ஞானத்தால் மோக்ஷமடைகிறது. ஞானமாத்திரமாயிருக்கும் பிர்ம்மத்தை யொழிய மற்றவையெல்லாம் பொய். ஒருவன் எஜமானனுயும் அடிமையாயும் காணப்படுகிற இது முதலிய பேதத்தையுடைய ஜகத் முழுவதும் பொய். வேதத்தில் ஜகத்தென்பதொன்றுண்டு. அதுவும் பிர்மத்திற்குட்பட்டிருக்கும்; என்று சொல்வதெல்லாம் அபேதவாக்யத்தின் பலத்தால் பொய்யாய் விடும். சம்சாரி, முமுக்ஷு, முக்தன் என்ற வேறுபாடில்லை. சிலர் முக்தியடைந்துள்ளார்கள் என்பதும் பொய். ஞானுேபதேசஞ்செய்கிற ஆசார்யனும் பொய். கேட்கிற மாணுக்கனும் பொய். சாஸ்திரத்தாலுண்டாகின்ற அறிவும் பொய். இங்ஙனம் பொய்யென்றறிபவையெல்லாம் பொய்யான சாஸ்திரத்தினு லறியப்படும்.

இஃதல்லாமலும் வைதிக வாக்யங்களின் தாத்பர்ய உணர்ச்சிக்கு உபக்ரமோபசம்மாரம், அப்யாஸம், அபூர்வதை, பலம், அர்த்தவாதம் என்ற ஆறும் தாத்பர்ய உணாச்சிக்குக் காரணமாகும். சாந்தோக்யத்தில் ஆருவது அத்யாய ஆரம்பத்தில் அதவிதீய பிர்ம்மம் சொல்லப்பட்டுளது. அவ்வாறே முடிவிலும் சொல்லப்பட்டுளது. இதனுல் உபக்ரமோபசம்மாரம் ஒருவடிவாந்தன்மை நன்கறியலாம். சாந்தோக்யததில் ஆருவது அத்யாயததில் ஒன்பது முறை "தத்வமஸி" வாக்யம் பயிலப்பட்டுளது. ஆகையால் அத்விதீய பிர்ம்மத்தில் அப்யாஸமுள்ளதறியலாம். வேதப்பிரமாணத்தின் வேறுகிய பிரமாணங்கட்கு அத்விதீய பிர்ம்மம் விஷயமாவதில்லையாதலால் அத்விதீய பிர்ம்மத்தில் அபூர்வதையுளது. அத்விதீய பிர்ம்மத்தின் ஞானத்தால் சோகமோகங்களின் நிவர்த்தி பலமாம். அத்விதீய பிர்ம்மத்தின் துதி உபநிஷத்துக்களில் தெளி

இங்கு 'ஓதியோதியுணருந்தோறும்' என்பதற்கு, பிறழ்கிலாது என்ற விசேஷணமிட்டார். ஆகவே இவ்வாதியர் உணர்வு பிறழ்ச்சியுடைத்தாமென்பது வெளியாகும்.

வாயுளது. ஆக இந்த ஆறு லிங்கங்களால் எல்லா உபநிஷத்துக்களுக்கும் தாத்பர்யம் அதவிதீய பிர்ம்மத்தின் கண்ணும்; என்கின்றனர்.

இவர்கள் முக்யமாக அங்கீகரிக்கப்படும் 'தத்வமஸி' என்ற வாக்யத்திற்கு இவர்கள் சொல்லுகிற பொருள் பொருத்தமாகவிருக்கின்றதா என்பது இங்கு ஆராயப்படும். இந்த 'தத்வமஸி' என்ற வாக்யம் சுவேதகேதுவை நோக்கி, அவர் பிதாவாகிய உத்தாலகர் கூறியது. சுவேதகேது பன்னிரண்டு வருஷம் குருகுலவாசஞ்செய்து கலைகளைப்பயின்று வந்தபோது உத்தாலகர் சுவேதகேதுவை நோக்கிப் பிர்ம்மவிஷயமான கேள்வி கேட்டார். அந்தக் கேள்விக்குச் சுவேதகேது விடையளிக்கமுடியாமல் திகைப்புற்று 'இதற்குத் தேவரீரே விடையளிக்கவேண்டும்' என்று வேண்டினர். அப்பொழுது உத்தாலகர், எதைக்கேட்டால் கேட்கப்படாததெல்லாம் கேட்கப்பட்டதாமோ, எதை மனனஞ்செய்தால் மனனஞ்செய்யப்படாததெல்லாம் மனனஞ்செய்யப்பட்டதாமோ அத்தகையதொன்றை யறிந்தால் எல்லாமறிந்ததாய்விடுமன்றோ! என்றனர். சுவேதகேது அது எப்படி? என்று வினவினர். அதற்கு அவர் மண்கட்டியை அறிந்தால் அதனால் ஆக்கப்படுகிற குடம் சட்டி முதலிய எல்லாமறியப்பட்டதாகும்; அதுபோல என்றனர்.

சுவேதகேது எதையறிந்தால் எல்லாமறிந்ததாய்விடுமோ அத்தகையதொன்றை உபதேசித்தருள்க; என்றனர். அப்பொழுது அவர் பலநாமரூப பேதங்களாகக் காணப்படுகிற இந்த ஜகத்தானது சிருஷ்டிக்குமுன் நாமரூபங்களற்று ஒரே நிலைமையுடைய ஸத்தாகவே இருந்தது. அதைத்தவிர வேறொன்றுமில்லை. இந்த ஸத்தென்று சொல்லப்படுகிற வஸ்து, இயங்குதிணை நிலைத்திணையாகக் காணப்படுகிற ஜகத்ரூபமாய்ப் பஹுவாக ஆகக்கடவேனென்று சங்கல்பித்து முதலில் அசேதனங்களைப் படைத்தது. இந்த ஜகத் முழுமையும் பிர்ம்மத்திற்கடங்கிய உற்பத்தியையும் லயத்தையுமுடையன. ஸுஷுப்திகாலத்திலும் ஆத்மாக்கள் பிர்ம்மத்துடன் கூடுகின்றன. தேகத்தைவிட்டுச் சென்றகாலத்திலும் ஸத்தென்ற வஸதுவோடு கூடுகின்றன; என்றுரைத்ததன்மேல் சுவேதகேது! ஆதமாக்களோடு கூடிய இந்த ஜகத் முழுமையும் ஸத்தென்பதையே ஆத்மாவாகவுடையன; என்பது உண்மை. இது, ப்ரமாணத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதால் ஸத்தென்று சொல்லப்படுவதே இதற்கு ஆத்மா. சுவேதகேதோ! நீ அதுவேயாகிறாய் என்றனர்.

வேதம் தெரிகிலா ஆதிதேவர், வேதியர் தெரிகிலா ஆதிதேவர், விரிஞ்சன் முதலோர் தெரிகிலா ஆதிதேவரெனக்கூட்டுக. வேதத்தாலும் காரணப் பொருளாகிய இறைவன் தன்மைகளை அறியமுடி

---

* இங்கு எதிர்முகமாகவிருக்கிற சுவேதகேதுவைப்பார்த்து நீ என்று சொல்லிய இந்தப் பதமானது சுவேதகேதுவுக்கு அந்தராத்மாவாயுள்ள பரமாத்மாவையுணர்த்தும். எல்லாச்சொல்லும் அபர்யவஸான விருத்தியினால் பரமாத்மாவையுணர்த்துமென்றதனாலும், சரீரத்தைக் குறிப்பிடுகின்றசொல்லெல்லாம் சரீரியை உணர்த்துமென்ற நியாயத்தினாலும் இங்கு நீ என்று குறித்துணர்த்திய சொல்லானது அந்தர்யாமியான பரமாத்மாவையே உணர்த்தும். ஆக நீ அதுவாகிறாய் என்பது ஜீவசரீரபரமாத்மாவையுணர்த்துமேயன்றி ஜீவபிர்ம்மஐக்யத்தைக் குறிப்பிடாது. ஏனென்றால் இவ்விடத்தில் எதையறிந்தால் எல்லாமறியப்பட்டதாகுமோ என்பது முதலில் விழுந்த வினா. இதனை நிரூபிப்பதற்காகப் பிர்ம்மத்தைக்காட்டிலும் வேறான எல்லாவுலகங்கட்கும் பிர்ம்மமே காரணமாகுமென்று சொல்லத்தொடங்கி அசேதனங்கட்கும் பிர்ம்மமே உபாதான காரணமென்று முன்னருரைத்துப் பின்னர் சேதனங்கட்கும் பிர்ம்மமே காரணமென்றும், சேதனாசேதனங்களெல்லாம் பிர்ம்மத்திற்குச் சரீரமென்றும், பிர்ம்மம் ஜகத்திற்கு ஆத்மாவென்றுமுரைத்து முடிவில் நீயும் அதுதான் என்றுரைத்தால் நீ என்பதற்குச் சுவேதகேதுவின் ஆத்மசரீர விசிஷ்ட பரமாத்மாவென்று தானே பொருள்கொள்ள வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் வேறெவ்வகையாகப் பொருள்கொள்வது?

இதனால் பிர்ம்மம் நிர்விசேஷமென்பது பொருந்தாது. இங்கு அது என்னுஞ்சுட்டானது முன் குறிப்பிடப்பட்ட தொன்றைத்தான் குறிப்பிடும். முன்னர் ஸத்தென்ற பொருள்தானே பஹுவாக ஆகக்கடவேனென்று சங்கல்பித்தது. இதைத்தானே அந்தச்சுட்டு குறித்துணர்த்த வேண்டும். மேலும் ஜகச்சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களும் ஸத்தென்ற பிர்ம்மத்தின் அதீனமாகவே இருக்குமென்றுரைத்ததினால் பிர்ம்மம் ஸவிசேஷமென்பது புலனாகும். இஃதல்லாமலும் ஜகத்காரண வஸ்துவான பிர்ம்மஸம்பந்தமான வேறு உபநிஷத்துக்களும் பிர்ம்மத்திற்கு எண்ணிறந்த கல்யாணகுணங்களுண்டென உரைத்தனவும் இதனை வலியுறுத்தும்.

நிர்விசேஷசின்மாத்திரமே பிர்ம்மம். அதனின் வேறாகியவெல்லாம் பொய்யென்பதும், அதனை மாயை மறைத்ததென்பதும யுக்திக்கும் சிறிதும் பொருந்தாது. பிர்ம்மத்தைக்காட்டிலும் ஜீவபேதமில்லையென்றால் மோக்ஷ சாஸ்திரம் எதற்காகப் பிரவர்த்தித்தது? இந்தச் சாஸ்திரம் அமலனாகிய பிர்ம்மத்தை நோக்கி எழுந்ததா? சாஸ்திரவிதியெல்லாம் ஜீவனை நோக்கியன்றோ எழுந்தன. ஒளியை இருட்டு எப்படி மறைக்க முடியும்? ஸ்வயம்

யாது. * "𑌉𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌰𑍍𑌯𑌬𑍍𑌜𑌭𑍁𑌵𑍋𑌽𑌪𑌿 𑌪𑍂𑌰𑍁𑌷𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑍍𑌯 𑌤𑍇 𑌯𑍇 𑌶𑌤𑌮𑌿𑌤𑍍𑌯𑌨𑍁𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍, 𑌗𑌿𑌰𑌸𑍍𑌤𑍍𑌵𑌦𑍇𑌕𑍈𑌕𑌗𑍁𑌣𑌾𑌵𑌧𑍀𑌪𑍍𑌸𑌯𑌾 𑌸𑌦𑌾 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌨𑍋𑌦𑍍𑌯𑌮𑌤𑍋𑌽𑌤𑌿𑌶𑍇𑌰𑌤𑍇" "உபர்யுபர்யப்ஜ புவோபி பூருஷாந் ப்ரகல்ப்யதேயே சதமித்யநுக்ரமாத், கிரஸ்த்வ தேகைக குணாவதீப்ஸயா ஸதாஸ்திதாநோத்ய மதோதிசேரதே" என்பதும் காண்க. சப்தப்ரமாணத்தாலே அவனுடைய தன்மைகளை அறிய முடியாதென்றால் ஏனைய பிரமாணங்களையறிந்தோர்களாலேனும் அறியவொண்ணுமோவென்னில்; அவர்களானுமுடியாதென்பார் வேதியரென்றார். வேதியர்-வேதப்ரமாணத்தையும் ஏனையப்ரத்யக்ஷ அநுமானாதிகளையும் அறிந்தவர்கள். பிர்ம்மத்திற்கு நேரே புதல்வனாயிருக்கின்ற உறவினால் அவனாலேனும் இறைவன் தன்மைகளையறியமுடியுமோவென்னில்; அவனாலுமுடியாதென்பார் விரிஞ்சன் என்றார். விரிஞ்சன்--பூதங்களைச்சிருஷ்டிக்கின்றவன். இந்தப்பிர்ம்ம

ப்ரகாசமாயிருக்கின்ற பிர்ம்ம வஸ்துவை மாயை எப்படி மறைக்கமுடியும்? அதை மறைத்ததென்று சொல்வது அஸம்பவ தோஷமன்றோ! ஆறுவகையான தாத்பர்யலிங்கங்கட்கு அத்விதீய பிர்ம்மத்தின்கண் தாத்பர்யமென்பதற்குச் சாந்தோக்யமொன்றிலிருந்து மாத்திரம் உதாரணமெடுத்துக்காட்டுவது எப்படிப் பொருந்தும்? "யதாபூதவாதிஹி சாஸ்த்ரம்" என்று ஒப்புக்கொள்ளவேண்டியதிருப்பதால் எல்லா வேதாந்த வாக்யங்கட்கும் பொருள் பொருத்தமாகவன்றோ பொருளுரைக்கவேண்டும்.

இன்னும் எவ்வகையாக ஆராய்ந்துபார்த்தாலும் அத்வைதசமயதத்வம் பிரமாணத்திற்கும், யுக்திக்கும் பொருத்தமற்றதாய்ப் புலப்படும். ஆதலால் இங்குக் கம்பர் "பேதியாதுயிர்பேதவுருவம்" என்று விசிஷ்டாத்வைதமே தத்வமென்று ஒப்புக்கொண்டாராயிற்று.

* இதன் பொருளாவது.— எம்பெருமானே! தேவரீருடைய அளவற்ற கல்யாணகுணங்களில் ஆநந்த குணமொன்றின் எல்லையைக் காணவேண்டுமென்னும் விருப்பத்தினால் நித்யமான வேதங்கள், கோடி என்ற பேரெண்ணை ஒன்று என்னும் சிறிய எண்ணின் ஸ்தானத்தில் வைத்தெண்ணுவதுபோல பிர்ம்மாவை மனுஷ்யரின் ஸ்தானத்தில் நிறுத்தி அவனுக்கு மேன் மேலும் மனுஷ்யகந்தர்வாதி பிர்ம்மாவரையாகப் புருஷர்களைக் கற்பித்துத்துதித்தும் ஆநந்தகுணத்தின் எல்லையைக்காணமாட்டாமல் இன்னும் முயன்றுகொண்டே இருக்கின்றன; என்பதாம்.

தேவனுக்குச்சிருஷ்டிகர்த்ருத்வமும், ஆதிபத்யமும், வேதோபதேச கர்த்ருத்வமும், பிர்ம்மபுத்திரனு முறவுமிருந்தாலும் இறைவன் தன்மைகளை யறிதற்கரிது.

* "பேரேவரப்பிதற்றலல்லால் என்பெம்மானை, ஆரேயறிவார் அதுநிற்க-நேரே,கடிக்கமலத்துள்ளிருந்தும் காண்கிலான்கண்ணன், அடிக்கமலந்தன்னை அயன்" என்பதும் காண்க. பிர்ம்மாவைப் போல் ஒத்தமதிப்புடைய ஏனையோர்களாலும் அறியமுடியுமோ வென்னில்; அவர்களாலும் அறியமுடியாதென்பார் முதலோர் என்றார். முதலோர் ருத்ரன் முதலானவாகள். ருத்ரனுக்குப் பிர்ம்ம தேவனது புதல்வனுயிருக்கும் தன்மையும் ஸம்ஹாரகர்த்ருத்வமும் அகஸ்தியர் முதலானூர்க்கு உபதேசிக்கும் தன்மையும் உண்டு. இவ்வளவு பெருமையிருந்தாலும் ருத்ரனுலும் இறைவன் தன்மைகளை அறியமுடியாது. § "நெறிவாசல் தானேயாய் நின்றானை யைந்து, பொறிவாசல் போர்க்கதவஞ் சாத்தி—அறிவானும், ஆலமர நீழல் அறம் நால்வர்க்கன்றுரைத்த, ஆலமமர்கண்டத்தரன்" என்பதுங்காண்க.

தெரிகிலா ஆதிதேவர்—அறியவொண்ணுத ஜகத்காரண வஸ்து வாகிய ஸர்வேசுவரன். ஆழ்வார்கள், பலவிடங்களிலும் ஸர்வேசுவரனுக்கு அசாதாரண திருநாமமாகிய நாராயண சப்தத்தை முற்கூறினல் அதன் அர்த்தத்தைப் பின்னுரைத்தும், அதைப் பிற்கூறினல் அதன் அர்த்தத்தை முன்னியம்பியும் செல்கிற நியமமுண்டு. இதனை, "நாரணன் முழுவேழுலகுக்கும் நாதன்" என்றும்,

---

* இதன் பொருளாவது.— திருநாமம் வாயில் வரும்படி சொல்லுகை யொழிய எம் ஸ்வாமியை அறியவல்வார் யாவர்? இது விஷயமிருக்க, பிரம்ம தேவன் திருமாலே வாசனையுடைய நாபீகமலத்திலிருந்தும் அவனுடைய திருவடிகளை அறியவல்லவனல்லன்; என்பதாம்.

§ இதன்பொருளாவது.— ஆலமரத்தின் சாயையில் தருமததை அகஸ்தியர் புலஸ்தியா தக்ஷப்பிரஜாபதி கச்யப்ரஜாபதி என்ற நால்வர்க்கும் அந்நாளில் உபதேசித்த விஷகண்டத்தையுடைய சிவன் பஞ்சேந்திரியங்களின் வாசல்களில் யுத்தம் செய்கின்ற கதவையடைத்து உபாயோபேயமாயிருக்கின்ற ஸர்வேசுவரனை அறியவல்லவனுவனே? என்பதாம்.

"யாவையும் யாவருந்தானமைவுடைகாரணன்" என்றும் அருளியதனாலறியலாம். அதுபோல இங்கும் ஸர்வேசுவரனது அசாதாரணஸ்வரூபத்தைப் "பேதியாதுங்கிர்பேதவுருவம்" என்றுரைத்தாராதலால், அதனர்த்தத்தையுஞ் சொல்லவேண்டிய நியமமுண்டு. அதனையே ஆதிதேவர் என்று கூறினார். ஆதலால் "பேதியாதுங்கிர்பேதவுருவம் ஆதிதேவர்" எனக்கூட்டுக. சிதசித்துக்களைச் சரீரமாகக்கொண்டுள்ள நிமித்தோபாதான ஸஹகாரிகாரணம் பிறிதொன்றில்லாமை என்பதேபேதியாதுங்கிர்பேதவுருவம் என்பதன் பொருளாம். அதன் கருத்துப் பொருளே ஆதிதேவர் என்பது.

மேலே, "பிறழ்கிலாது ஓதியோதியுணருந் தொறும் உணர்ச்சியுதவும் வேதம்" என்று வேதமானது, விபரீதமில்லாமல் பயின்றால் பேதாபேத ஸ்வரூபத்தை உள்ளவாறறிவிக்குமென்று உரைத்து அதற்குவிரோதமாக இங்கு இறைவன் தன்மைகளை வேதத்தாலும் அறியமுடியாதென்றுரைப்பது பொருந்துமோவென்னில்; அங்கு உணர்ச்சியுதவும் வேதமென்றது ப்ரத்யக்ஷாதி ப்ரமாணங்கள் மயக்க உணர்ச்சிக்குங் காரணமாய் மயக்க நிவர்த்தகமாயுமிருக்கும்; வேதம் அவைபோலிலாமல் "யதாபூதவாதிஹிசாஸ்த்ரம்" என்றபடி உண்மையையே அறிவிக்குமென்றவாறு. இதனால் இறைவன்வேதத்தால்அறியத்தக்கவனென்பதுபுலனும். அத்தகைய வேதமும், ஸ்வயத்னத்தால் இறைவன் தன்மைகளை அறிவோமென்று அஹங்கரிக்குமானல் அதனாலும் அறியவொண்ணாதென்று இங்குரைக்கப்பட்டது. ஆதலால் முன்பின் விரோதமின்மை அறிக. ஸ்வயத்னத்தால் அறியவேண்டுமென்று முயல்வார் எவ்வளவு சிறப்புடையவராயிருந்தாலும் அவர்களாலும் இறைவனது பெருமைகளை அறியவொண்ணாதென்பதை நன்கு விளக்குதற் பொருட்டே இங்கு "வேதம் வேதியர் விரிஞ்சன் முதலோர் தெரிகிலா, ஆதிதேவர்" என்று குறிப்பிட்டார். இறைவன் அருள்வழிபபட்டவர்களாகிய ஆழ்வார்கள் அவனுடைய ஸ்வரூப இயல்புகளை அவனே காட்டக் கண்டவர்களாதலால அவற்றைத் தெளிவாக அறிந்தவராவார்கள். இது பற்றியே இவரும் (கம்பரும) "செய்யோ டருவிக் குருகைப்பிரான் திருமாலை நங்கள், கையோர் கனியெனக் காட்டித் தந்தான்" என்றுரைத்தனர். ஆழ்வாரும், "ஆம்வண்ணமின்ன

தொன்றென்றறிய வரிய அரியை, ஆம்வண்ணத்தால் குருகூர்ச்சட கோபன் அறிந்துரைத்த" என்றருளிச்செய்தார். இதனால் அவனருள் வழிப்பட்டோர்கள் அவன் ஸ்வரூப இயல்புகளை நன்கறிவார்களென்பது புலப்படும்.

எம்மறிவினுக்கறிவரோ என்றது அதிகாரி புருஷர்களாலும் அறியவொண்ணாத இறைவன் ஆதிபத்தியமும் விசேஷ அறிவுமில்லாத எம்மறிவுக்கு விஷயமாவானோ என்றவாறு. ஆசிரியர் தங்கருத்துக்கிசைந்தவர்களையும் உளப்படுத்தி என் என்னாது எம் என்றார். முன் வாழ்த்தில் "வானின்றிழிந்து வரம்பிகந்த மாபூதத்தின் வைப்பெங்கும், ஊனுள் உயிருள் உணர்வும்போல் உளனும் புறத்து மூளனென்ப" என்று ஜகத்துக்கும் பிர்ம்மத்துக்கும் சரீர சரீரி பாவசம்பந்தம் உள்ளதென்றுரைத்து இங்கும் அதனையே விளக்கி, "பேதியாது நிமிர்பேதவுருவம்" என்று உரைத்தனர். ஆதலால் இவருக்கு விசிஷ்டாத்வைதமே உடன்பாடென்பது பெறப்படும். இந்த சமயச்சார்பினர்கள் தெள்ளியராய் இருந்தார்களேனும் இறைவனது பெருமையை நோக்கி தம்மைக்குறித்து நீசத்வானுசந்தானம் செய்துகொண்டிருப்பார்களாதலால் தெளிந்த அறிவில்லாத எங்களுடைய அறிவுக்கு அவன் விஷயமாக மாட்டானென்று தம்முடைய வினயத்தைத் தெரிவித்தார்.

தொடரும். ப. அ.

ஸ்ரீ:

அத்யவஸாயத்தின் பெருமை.

[சேரன்குளம் ஸ்ரீ. உ. வே. வித்வான் வேங்கடாசார்ய ஸ்வாமி எழுதுவது.]

(224-ம் பக்கத்தொடர்ச்சி.)

அக்னிபுருஷன் ஸப்தரிஷிபத்னிகளிடம் காதல் கொண்டு அவர்களை அடையமுடியாமல் தன் பத்தினியாகிய ஸ்வாஹாதேவியையுமறந்து திரிந்தனன். ஸ்வாஹாதேவி இவன்கருத்தறிந்து அந்த ரிஷிபத்தினிகளுடைய ஒவ்வொருத்தியின் உருவத்தை ஒவ்வொரு

நாளுந் தரித்துக்கொண்டு தன் கணவனை மகிழ்வித்துக்கொண்டிருந்தாள். இப்படியிருக்கிற நாளில் ஸ்வாஹாதேவி அருந்ததியின் உருவத்தை எடுக்கநினைத்து முடியாமல் அகன்றனள். இப்படி முடியாமைக்குக்காரணம் அருந்ததியின் பாதிவ்ருத்யத்தின் ஊற்றமேயாம். மற்ற ரிஷிபத்தினிகட்கு இதுவிஷயம் தெரியாதிருக்கவும், இவர்களுடைய பர்த்தாக்கள் இவர்களுடைய ரூபக்ரஹணத்தை அவள் செய்ததே காரணமாக இவர்களுக்குப் பாதிவ்ருத்தியக் குறைவுண்டானதாகக்கருதி இவர்களை விலக்கிவிட்டார்கள். இவர்கள் மறுபடியும் அருந்தவமிருந்து நக்ஷத்ரமண்டலத்தில் கிருத்திகா நக்ஷத்ரமாக விளங்குகிறார்கள்.

ஸப்தரிஷி மண்டலத்தில் வஸிஷ்டர் பக்கத்தில் அருந்ததி கண்ணிற்குப் புலப்பட்டும் புலப்படாமலிருப்பதையும், மற்றவர்கள் பத்னியில்லாமல் தனிமையாக இருப்பதையும் காணலாம். அருந்ததி தெளிவாக விளங்காது கண்ணுக்குப் புலப்பட்டும் புலப்படாமலுமிருப்பதற்கு ஸ்வாஹாதேவி இவளுடைய ரூபத்தைக் கொள்ளவேண்டுமென்று நினைக்க, அவளது நினைவிற்கு விஷயமாயிருந்ததே காரணமாகும். இதனால் ஸ்வாஹாதேவியின் நினைவிற்கு விஷயமாயிருந்ததும் அருந்ததியின் பாதிவ்ருத்யத்திற்குக் குறைவென்பது விளங்கும்.

இச்சரித்திரத்தை ஆராயும்போது தமயந்தி மறுஸ்வயம்வரம் தன்நாயகனை யடைதற்காகச்செய்த சூழ்ச்சியாகவிருந்தாலும், மறுஸ்வயம்வரம் வரிக்கப்போகிறாள் என்று இவளே சொன்னது குறைவேயாம். சாவித்திரியினிலைமையை நோக்கிலது தமயந்தியைப் போலில்லை. பாதிவ்ருத்யத்தில் அத்யவஸாயம் உறைத்திருக்கவேண்டாதபடி விரோதம் ப்ரபலம். நாட்டிலுள்ளார்போல நமக்கு வாழ்வுண்டென்கிற நினைவுங்கூடஒழிந்தது. இவள் விவாஹம் தொடங்கி பதினொருமாதமே பதியின் ஜீவதசையென்று தெரிந்துகொண்டாளாதலால் நாள் நெருங்கநெருங்க வயிறுபதைக்கும். கணவனுடைய ஆயுளின் வரையறை தெரியாதிருந்தாலும், இருந்துவாழும் நாளில் கவலையற்றிருக்கலாம். அதுவுமில்லை. இவள், அரசன் அருந்தவமிருந்து அருமையாகப்பெற்ற செல்வமகள். விவாஹ முடிந்ததும், ஆடையாபரணங்களைத் தனைந்தெரிந்து காஷாய முடுத்திக் காய்

கிழங்கு கொண்டுவரக் கூடையுங் கையுமாகப் புறப்படவேண்டியவ ளானள். அருந்தவத்தாற் பெற்று அருமையாக வளர்த்த அரசன் யாரிடத்தும் கண்டிராத குணவிசேஷங்கள் அமையப்பெற்ற இப் பெண்ணுக்கு நேர்ந்த நிலைமையைக்குறித்து இவன் அடைந்த மனக் கலக்கத்தை வாய்கொண்டு சொல்லவொண்ணுமோ!

நிற்க, ஸ்திரீகளுக்குப் பிதாவின் அனுமதியில்லையாகில் ஸ்வயம் வரம் நடத்தலாகாது. ஸாவித்திரியின் தகப்பன் ஸாவித்திரியை அனுப்பும்போது 'நீ குறிப்பிட்டபுருஷனை என்னிடம்வந்து சொல்; நான் ஆலோசித்து விவாஹத்தை முடிக்கிறேன்' என்று சொல்லி யிருந்தானுதலால் இவள் நினைப்பிட்ட புருஷன் அவனுடைய அனு மதிக்குப் பிறகே இவளுக்குப் பதியாவதற்குரியன். அப்படியிருக்க இவள் தகப்பன் எல்லாம் செய்யச் சக்தரான நாரதரின் அனுமதி கொண்டு ஸாவித்திரியை நோக்கி ஸத்தியவானை விட்டு வேறு புரு ஷனை வரிப்பாய்' என்று வற்புறுத்தியவிடத்தும் இவள் சிறிதும் கலங்காது அவனையே நாயகனென்று உறுதிகொண்டது மிகவும் அருமை. ஆதலால் இவளுடைய அத்யவஸாயம் மிகவும் உயர்ந்த தாகும். இவளுக்கேற்பட்ட பெருமை அவளுக்கேற்பட்ட பெருமை யினும் சிறந்ததே.

தமயந்தி, தன்னுடைய சபதத்தினுல் இந்திராதிகளை ஊருக் காட்ட மயக்கினள். ஸாவித்திரி ஒரு பிரதிஜ்ஞையும் செய்யாதிருக் கவே இவளது கண்ணிற்கு யமன் தோற்றினன். உயிரை வாங்க வந்தவன் இவள் கண்ணிற்குபபுலப்பட நியாயமில்லை. கண்ணிற்குப் புலப்பட்டவுடனே மறைந்தானென்பதுமில்லை. இவள் பின்தொடர்ந்துவர ஆகாயமார்க்கமாய் விரைவிற் செல்லவேண்டியவன் அது செய்யமுடியாமல் இவள் நடையை அநுசரித்து வார்த்தையாடிக் கொண்டு சென்றுன். இதுயாருக்கு நேர்ந்திருக்கிறது! கூடச் சென்று வார்த்தையாடியமுறையில திருப்தியடைந்த யமன் இவள் வேண்டிய வரங்களையுங் கொடுத்தான். ஆகையால ஸாவித்திரிக்கு ஏற்பட்ட பெருமை மேலானது. யமன் இவளுக்கு நூறுபிள்ளை களுண்டாகும்படி வரமளித்த பின்னரும், ஸத்தியவானை விடா மைக்குக்காரணம் இதுவாகும். அது வருமாறு.—

ஸௌதாஸ பத்தினியான மதயந்தீ ஸௌதாஸனுக்குப் புத்திரோத்பத்திக்குப் பிரதிபந்தகமான ரிஷிசாபம் ஏற்பட்டிருந்தது காரணமாகக் குலகுருவான வஸிஷ்டரைக்கொண்டு புத்திரனையுண்டாக்கிக் கொண்டதுபோல நானுமுண்டாக்கிக் கொள்ளலாமென்னும் கருத்துடையவனாய்ச் செல்கின்றான்; ஆபத்தர்மம் நமக்குத் தேவையில்லை, என்று வெறுத்து, யமனை நோக்கி முக்ய தர்மத்தை யநுஷ்டிக்கும்படியன்றோ பெரியோர் உபதேசிப்பர். வேறும்வழியில்லாத ஆபத்தசையில் கௌண தர்மத்தை அநுஷ்டிக்கும்படி அநுமதி செய்வார்கள். நான் முக்ய தர்மத்தை அநுஷ்டிக்கும்படி செய்யலாமுறை உம்முடைய அதீநமாயிருக்க எனக்கு ஆபத்தர்மத்தை எப்படி விதிக்க நினைத்தீர்! என்று வினவ அவனும் பதிலுரைக்க மயங்கி ஸத்தியவானையும் விட்டுப்போனான். ஸத்யவான் உயிரைக் காலந்தப்பாது வாங்கவந்த யமன் வரங்கேட்கச்சொன்னபோது ஸத்யவானைத்தவிர கேட்பாய் என்று இவனை விலக்கிக்கொண்டவன் கடைசி வரத்தில் ஏமாந்து போனான். இப்படி ஒரு அதிகாரத்திலிருக்குமவன் அதைத்தவறாது நடத்திப்போகிறவன் மயங்கினானென்றபோது இவள் பெருமை மேலானதன்றோ!

இனி, ஏகபத்னியைப பற்றி விசாரிப்போம். ஒரு ப்ராஹ்மண ப்ரஹ்மசாரி அநுஷ்டானார்த்தமாக ஒரு குளக்கரையில் தங்கியபோது மரத்திலிருந்த ஒரு கொக்கு இவன் தலையில் எச்சமிட்டது. இவன்கோபித்து அண்ணாந்துபார்த்தான்; உடனே அந்தக்கொக்கு சாம்பலாய் எரிந்து விழுந்தது. இதனைக்கண்ட ப்ரஹ்மசாரி 'தவநிலையின் பலம் கைபுகுந்தது' என்கிற இறுமாப்புடன் நாட்டையடைந்து பிக்ஷாடநம் செய்துகொண்டிருந்தான். ஒருநாள் பாதிவ்ருத்யத்தில் ஊற்றமுண்டானதுவே காரணமாக ஏகபத்னீ என்றே பெயர் வழங்கப்பட்ட ஒரு ப்ராஹ்மண பத்னீயிடத்திற் சென்று பிக்ஷை கேட்டான். அவளும் பிக்ஷையிடுவதாக இருக்கச் சொல்லிவிட்டு உள்ளேபுகுந்தாள். அங்குத் தன்னுடைய பர்த்தா சிரமத்துடனிருக்கக்கண்டு இவனைமறந்து பணிவிடையிலமர்ந்தாள். ப்ரஹ்மசாரி வாசலில் இருந்தான். பிக்ஷைக்கு செல்கின்றவர்கள் 'பவதி பிக்ஷாந்தேஹி' என்கிற வார்த்தை உள்ளிருக்கிறவர்கள் காதிற்பட்டுவருகிற அவகாசத்தளவே நிற்கலாம். கதவின் இடுக்கு வழியாகப்

புரக்கலாகாது. ஆதலால் இருக்கும்படிசொன்னால்போகலாகாது ஆதலால் இந்த பிரம்மசாரியும் வாசலிலே நெடுநேரம் தங்கியிருக்கும்படி நேர்ந்தது. சினங்கொண்டான். அப்பொழுது பதியின் பணிவிடையால் இவனை மறந்திருந்த ஏகபத்னீயானவள் இவன் நினைவுக்குவந்தவுடன் ‘அந்தோ! என்னகார்யஞ்செய்தோம்’என்று தன்னை நொந்து கொண்டு பிக்ஷையுடன் வரக்கண்டான். இவன் உறுத்து நோக்கினான்; கோபக்குறிகாட்டினான். அவள் சிரித்து என்னை நீர் கொக்கா நினைத்தீர் போலும்! உமக்கு இன்னும் தர்ம நிர்ணயம் பிறந்தநில்லை; உமக்குத்தெரிந்துகொள்ளவேண்டியமுறை பலவுண்டு; அவற்றைத் தர்மவ்யாதனிடம் சென்று தெளிந்து கொள்வீர்; என்று சொல்லி “வதிஸுஸ்ரூஷயா யச்சேஷ்ட யஹூ நோரவிதே த்விஜா” “பதிசிச்ரூஷயா தர்மோ யஸ்ஸமேரோசதே த்விஜா” என்று தன்னுடைய நிஷ்டையையுமுரைத்து அனுப்பினாள். இதுவே இவள் விஷயமான சரித்திரம்.

இதனால இவளுடைய நிஷ்டை எத்தன்மையுடையது? இவளுக்கேற்பட்ட பெருமை எவ்வளவென்று ஆராயவேண்டும். இந்த ஏகபத்னீ பிரஹ்மசாரி பிராம்மணனை நோக்கி ‘என்னை கொக்கா நினைத்தீர் போலும்’ என்று சொன்னது வியக்கத்தக்கது. காட்டில் தனியிடத்தில் நடந்ததை உள்ளபடி உரைத்தாள். பிரஹமசாரியும் கேட்டு வியபபடைந்தான். இப்படிக் கண்ணுக்கெட்டாத விஷயத்தை அறிந்து சொலலும் இயல்பு ஸாவித்திரி முதலானோர்களிடத்திலுமிலலை. அவர்களிற்காட்டில் இவளுக்கிது அதிசயத்தை விளைப்பதாகும். அப்படிப்பட்ட அதிசயம, மற்றவர்களிடத்தில இல்லாதது இவளிடத்தில் மாத்திரம் உண்டாயிற்றென்று சொல்லவில்லை. ஆனால் இவள் பிராம்மணனை நோக்கிச் சொன்னபோது “பதிசிச்ரூஷயா தர்ம: யஸ்ஸ மே ரோசதே த்விஜ” என்று சொல்லியிருக்கிறாள். அஃதாவது பதிசிச்ரூஷையில் ஏற்படக்கூடிய தர்மம் எனக்கு ருசிக்கிறதென்று சொல்லியிருக்கிறாள். பதிவ்விரதைகளாயிருப்பார் எவருக்கும் இது உரியதேயாம். இவளுக்கு மாத்திரமுள்ளதாக அதீந்திரிய விஷயஜ்ஞானத்தைச சொல்லியிருக்க அதுக்குறிப்பாக மற்றொருவரிடமில்லாத ஒரு அநுஷ்டான விசேஷமிருப்பதாகச்சொல்ல வேண்டும்.

மேலும், பர்த்தாவினுடைய பணிவிடையில் ஏற்படக்கூடிய தர்மமே ருசிக்கிறது என்று சொல்லும்போது மற்ற தர்மங்கள் இவளுக்கு ருசிக்கவில்லையென்று ஏற்படுகிறது. ருசிக்காத தர்மங்களை அநுஷ்டிப்பதாகச் சொல்லமுடியாது. பிராம்மணனுக்குப் பிச்சையிடுவதாகச் சொல்லியிருக்க வேண்டியதில்லை. அவனும் இவள் இப்படிச் சொன்னபோது 'உனக்கு ருசிக்காதிருக்க எனக்குப் பிக்ஷையிடுவதாகச் சொல்லுவதென்' என்று கேட்கவும்கூடும். ஆக, இவைகளை நோக்கும்போது ஒருமுறைக்கும் விரோதமில்லாததாய் இவளுக்குமாத்திரம் உண்டானதாய் இந்தச்சுலோகத்திற்குப பொருள் சொன்னல் பொருத்தமாயிருக்கும். இருப்பதைக்கொண்டே பொருத்தமாக உரைக்க வேண்டியதவசியம். ஆகையால் பர்த்தாவின் பணிவிடையால் ஏற்படக்கூடிய தர்மமே எனக்கு ருசிக்கிறதென்கிற அர்த்தத்தைவிட்டு, "யஃ யஃ ஸஃ வதிஶுஶ்ரூஷயாமேரோசதே" "ய: தர்ம: ஸ: பதிசுச்ருஷயா மேரோசதே" என்று அந்வயங்கொண்டு பதியின் பணிவிடைக்குப் பலத்வமும், பலத்துக்கு ஹேதுத்வம் சொல்ல திருதீயைகொண்டு "பதிஶுஶ்ரூஷாரூப ஃலஹேதுநா மேரோசதே" "பதிசுச்ருஷாரூப பலஹேதுநா மேரோசதே" என்று கொள்ளவேண்டும். அர்த்தபலத்தால் "ய: ஸ: என்று வீப்ஸை புகும். அப்பொழுது எவை தர்மமாக வியவஹரிக்கப்படுகின்றனவோ அவை பதிசுச்ருஷாரூப பலத்தைக் கொடுப்பது காரணமாக எனக்கு ருசிக்கிறது என்று சொன்னபடியாகிறது. அப்போது அவள் கருத்து வேருரும். அலௌகிக ச்ரேயஸ்ஸாதநம் தர்மமாகும். அஃதாவது கண்ணிற்குப் புலப்படாவிருந்து நம்முடைய நன்மைக்கு காரணமாவது எதுவோ அதுவே தர்மமாகு மென்பதாம். அந்த நன்மை இந்த லோகத்தில் உண்டானலும் பரலோகத்திலுண்டானலும் அதிலொருவாசியில்லை.

உலகத்தார் தர்மங்களை அநுஷ்டிப்பதெல்லாம் இஹபரங்களில் தாமடைய வேண்டிய நன்மையை நாடியேயாம்; நான் அப்படிச் செய்வதில்லை; என்னை ஒரு பொருளாக நினைத்து எனக்கு ஒரு நன்மை வேண்டும் என்று கருதி நான் தர்மத்தைச் செய்வ

இல்லை; எந்தத் தர்மத்தைச் செய்தேனாயினும் அது என்னுடைய நாயகனுக்கு முகமலர்ச்சி யுண்டாகுமென்று கருதியே நான் செய்வதாகும். அப்படி யாகும்போது உமக்குப் பிசைஷயிடுவதும் பர்த்தாவின் முகோல்லாஸார்த்தமாகவே. ஆகவே நான் உட்புகுந்த போது பர்த்தாவை சிரமத்துடனிருக்கக்கண்ட எனக்கு முந்தி அவர் சிரமந்தீர உபசரிப்பது அதிலும் முக்யமாம். உமக்குத் திருப்தி செய்து அதின் வழியாகப் பர்த்தாவுக்குத் திருப்தியுண்டாக்குவதைக்காட்டிலும் நேராக அவருக்குச் சிரமத்தைத்தீர்த்து திருப்தியுண்டாக்குவது உயர்ந்ததாகும். ஆகையால் நான் உம்மை மறந்தது குற்றமாகாது; என்கிற கருத்தாம்.

இவள் கருத்தாற் கிடைப்பது இதுவாகும். அஃதாவது * ஸத்வாரகமாகப் பர்த்தாவை திருப்தி செய்வதைக் காட்டிலும், ‡ அத்வாரகமாகத் திருப்தி செய்வது உயர்ந்ததாகுமென்பதாம். இப்படி ஒருவனுக்கு அநந்யார்ஹசேஷபூதையா யிருக்குமவள் ஸ்வாநுஷ்டாநத்துக்கு அவனுடைய முகோல்லாஸத்தையே பலமாகக்கொண்டதும், அதிலும் ஸத்வாரகமாகச்செய்யும் பணிவிடையைக் காட்டிலும் அத்வாரகமாகச் செய்யும் பணிவிடையை விசேஷமாகக் கொண்டதும் இவள் அநுஷ்டானத்திற்கு விசேஷமாகும். அதனால் இவளடைந்த பெருமையும் சிறந்ததாகும். ஏகபத்னீ என்றே இவள் பாதிவ்ருத்யத்தின் பெருமை தோற்ற வ்யவஹாரமும், அதீந்திரிய ஞாநமும் இவளுக்கே யுள்ளனவாகும்.

இதனால் எம்பெருமானுக்கு அநந்யார்ஹ சேஷபூதர்களான ஸ்ரீவைஷ்ணவர்கள் அநுஷ்டிக்குந் தர்மங்களுக்கு இது ஒரு நிதர்சனமாகும். சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட தர்மங்களைப் பகவதாராதனமென்றே அநுஷ்டிப்பதும், அதிலும் ஸத்வாரக ஆராதனத்திலும் அத்வாரக ஆராதனம் உயர்ந்ததெனக்கொள்வதும் ஸத்ஸம்ப்ரதாய ஸித்தமாகும். பெரியார் ஸந்தியாவந்தனாதி கர்மங்களில் அக்நீந்திராதி சப்தங்களை ததந்தர்யாமியான பரமாத்மா பர்யந்தம்

---

* ஸத்வாரகமாகச்செய்வது—ஒன்றன்வழியாகச்செய்வது.

‡ அத்வாரகமாகச்செய்வது—ஒன்றன்வழியின்றி நேரே செய்வது.

அநுஸந்தித்து அநுஷ்டிப்பர்கள். ஆகையால் அவர்கள் அநுஷ்டானம் பகவதாராதனமே யாகும். ஆனாலும் அக்நீந்திரியரின் வழியாக எம்பெருமானை ஆராதிப்பதாக விருப்பதால் இது ஸத்வாரகாராதனமாகும். கோயில்களில் அர்ச்சாரூபேண எம்பெருமானுடைய கைங்கர்யம் ஸாக்ஷாதாராதநமாகும். அஃதாவது அத்வாரகாராதநமாகும். அத்வாரகம், ஸத்வாரகம் என்ற இரண்டனுள் அத்வாரகாராதநம் சிறந்ததாகையால் எம்பெருமானுடைய புறப்பாட்டில் *அநுயாத்ராதி கைங்கர்யங்களைச்செய்து போருமவர்கள், ஸந்தியாவந்தனாதி காலம்வரில் அதைப்ரதான மாகக்கொள்ளாதே இந்தக் கைங்கர்யங்களைமுடித்துக்கொண்டு ஸந்தியாவந்தனாதிகளில் அந்வயிப்பது ஸம்ப்ரதாய ஸித்தமாக விருக்கிறது.

ஒருநாள் உபந்யாஸம், ஸந்தியாகாலாதிக்ரமணத்தைச்செய்ய, பட்டர் 'இன்று காலாதிக்ரமணத்திற்கு நமனுக்கு நாம் பயப்பட வேண்டியதில்லை' என்று அருளிச்செய்தார். இதுவும் இங்காராயத் தக்கது. சிலர் ஸந்தியாவந்தநாதி கர்மங்களை ஆஜ்ஞா கைங்கர்யங்களாகும். (அஃதாவது செய்யாவிடில் அநர்த்தத்தை விளைக்கும் கைங்கர்யங்களென்பதாம்.) ஆக அநுஜ்ஞா கைங்கர்யங்களான அநுயாத்திராதிகளைக் காட்டிலும், ஆஜ்ஞாகைங்கர்யங்களான ஸந்தியாவந்தனாதிகள் ப்ரதானமாகும். ஆகையால் ஸந்தியாவந்தனாதிகட்கு விரோதமின்றி அநுயாத்திராதிகளை அநுஷ்டிக்கவேண்டுமென்பர்கள். அஃதாவது அநுயாத்திராதிகளில் அந்வயித்தவர்கள் ஸந்தியாவந்தன காலம்வரில் கைங்கர்யத்தை நிறுத்தி இதை முடித்துக்கொண்டு மறுபடியும் அதில் அந்வயிக்கவேண்டுமென்பர்கள். அப்படியாகில் ஸந்தியாகாலத்துக்குமுந்தியே கைங்கர்யத்தில் அந்வயித்துப்போருமவர்கள், நடுவில் பெருமாள் எழுந்தருள ஸந்தியாகாலம் வரக்கண்டால் உடனே பெருமாளை அங்கேயே நிறுத்திவிட்டுத் திருவெண்கொற்றக்குடை, திருவெண்சாமரம் இவைகள் பரிமாறுவாரும், பக்ஷிராஜன் பரிகரத்தாரும் செல்லவேண்டிவரும்.

* அநுயாத்திரை—எம்பெருமானுடைய புறப்பாட்டில் தன் ஸ்வரூபஸித்தியின்பொருட்டுக் கூடப்போதல்.

மேலும், அநுயாத்திராதிகளே, அநுஜ்ஞாகைங்கர்யங்களாகவும், சொல்லலாகாது. ஸந்தியாவந்தனாதிகள், ஸ்ரீ வைஷ்ணவரல்லாத வர்ண தர்மிகளுக்கும் உரியதாதலால் ஸாதாரண ஆஜ்ஞாகைங்கர்யங்களாகும். அநுயாத்திராதிகள் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கே உரியதாகை யால் அஸாதாரண கைங்கர்யங்களாகும். ஆக, ஸாதாரண ஆஜ்ஞா கைங்கர்யங்களைக்காட்டிலும், அஸாதாரண ஆஜ்ஞா கைங்கர்யங் களே அவசியமாகையால் (ஸந்தியாவந்தனாதிகளைக் காட்டிலும், அஸாதாரண ஆஜ்ஞா கைங்கர்யங்களே அவசியமாகையால்) ஸந்தி யாவந்தனாதிகளைக் காட்டிலும் அநுயாத்திராதி கைங்கர்யங்களே ப்ரதானங்களாகும். இதை, "அத்தாணிச்சேவகத்தில் பொது வானது நழுவும்" என்று பெரியார்கள் காட்டினார்கள்.

இப்படி ஸத்ஸம்ப்ரதாயஸித்தமான அநுஷ்டான விசேஷம், ஏகபத்னியினுடைய அநுஷ்டான விசேஷத்திலும் நேரப்பெற்றது; ஆராயத்தக்கது. இப்படி ஸதாசாரஸித்தமான அநுஷ்டானத்தைக் கைக்கொண்டது ஏகபத்னிக்கு மற்றவர்களிலும் விசேஷமாகும். அதனால் மற்றவர்கள் அதிசயத்திலும் இவளுடைய அதிசயம் விஞ்சியதாகும். மற்றவர்களுடைய தர்மாநுஷ்டானமும், பர்த்தா வின் பணிவிடையும் பரலோகஸாதகமென்கிற கருத்துடனே அநுஷ்டிக்கப்பட்டதாகும்.

தொடரும்.

ஸ்ரீ:

பாகவதாபசாரம்.

(243-ம் பக்கத்தொடர்ச்சி.)

"நாமரூபங்களையுடையராய்" என்னும் வாக்யமுதல் இது வரை பாகவதாபசாரத்தின் ஸ்வரூபமும், அதன் க்ரூரத்தன்மை யும், அதன் பிரிவுகளும், அதற்குப் பிரமாணங்களும், திருஷ்டாந் தங்களும், அதற்கு அதிகாரி நியமமின்மையும், அதன் காரணங்

களும் விரிவாய் அருளிச்செய்து, * ப்ரசங்காத் ஜந்மாதி உத்க்ருஷ்டங்களிலுள்ள ப்ரதிகூலத்தன்மையும், அபக்ருஷ்ட ஜந்மங்களிலுள்ள அநுகூலத்தன்மையும, உத்க்ருஷ்டஜந்மங்களிலுள்ள தோஷநிவ்ருத்திக்குக் காரணமும், அத்தோஷபரிகாரங்கட்குப் பிரமாணமும் அருளிச்செய்தார். இனி, பாகவதஸம்பந்தத்தின் பெருமையும், அவர்களை ப்ரதிபத்திசெய்யவேண்டியகிரமங்களும், அதற்குப்பிரமாணங்களும் சிஷ்டாசாரங்களும் விஸ்தாரமாய் அருளிச்செய்கின்றார்.

நிற்க; "ப்ராஹ்மண்யம் விலைச்செல்லுகிறது" என்னும் வாக்யந்தொடங்கி, இதுவரை மூலவ்யாக்யானங்களின் கருத்தைத் தெளிவாய் விளக்கி எழுதப்பட்டன. இவ்வர்த்தமே நடுநிலைமையோடு ஆராய்வார்க்குப் பொருத்தமுடையதென்பது தெள்ளிதிற் புலனாகும். இப்போது சில நவீனர்கள், இதுவரையும் கூறிய அர்த்தம் ஆபாதப்ரதீதி யென்றும், அப்படிச்சொல்வதால் சில தோஷங்கள் ஏற்படுமென்றுஞ்சொல்லி இவ்விடத்தில் மூலத்திற்கும், வியாக்யானத்திற்கும், பின் நிரூபித்துக்கொண்டுபோகிற அர்த்தங்கட்கும் பொருத்தமில்லாத அர்த்தங்களைக் கற்பித்துச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். இங்ஙனம் இவர்கள் கூறும் அர்த்தங்கள் மூலவ்யாக்யானங்களில் ஒன்றிலும் அந்வயிக்காமல் தனியாக ஓர் கதாரூபமாகவிருப்பதால், அவற்றை இவ்விடத்தில் அநுவதிக்கவில்லை. அவர்கள் கூறும் தோஷங்கள் இவ்விடத்தில் ஏற்படவில்லை என்பதை மாத்திரம் நிரூபிப்பதற்காக அவற்றின் அநுவாதஞ் செய்யப்படுகின்றன. அவையாவன.—

முதலாவது தோஷம்—பிராஹ்மண்யம் அஹங்காரத்தின் § காரணதாவச்சேதகமாகாமையால் அது அஹங்காரத்தின் காரணமாகாதென்பது.

---

* பிரசங்கமாவது-ஒருவிஷயத்தைப் பிரஸ்தாபித்துக்கொண்டு வருகிற காலத்தில் அதுஸம்பந்தமான மற்றொன்று நினைவிற்கு விஷயமானால் அதை உபேக்ஷிக்காமல் அவ்விடத்திற் சொல்வதாம்.

§ காரணதாவச்சேதகமாவது—காரணத்வ தர்மத்தின் ஸமநியதமான ஓர் தர்ம விசேஷம். அது, -கந்தகாரணத்வ தர்மத்தைக்குறித்துப்ருதிவித்வ தர்மம் போலும்.

இரண்டாவது தோஷம்--ஜந்மநிரூபணம் மிகவும் க்ரூரமான பாகவதாபசாரம் என்று அருளிச்செய்த இவர் தாமே (லோகாசார்யர்தாமே) ப்ராஹ்மண்யம் அஹங்காரஹேதுவென்றுகூறுவது ஜந்மநிரூபணமாகிய பாகவதாபசாரமாம் என்பது.

மூன்றுவது தோஷம்--பிராஹ்மண்யத்துக்கு மேல் தேவஜாதியிருப்பதால் இதுவே உயர்ந்ததென்று கூறுவது பொருந்தாது; என்பது.

நான்காவது தோஷம்--சூத்திர ஜாதியும், பஞ்சம ஜாதியை நோக்க உயர்ந்ததாதலால் இதுவும் அஹங்காரத்திற்குக் காரணமாகுமென்பது.

ஐந்தாவது தோஷம்—ஆழ்வார்கள் உயர்ந்த ஜாதியிலும், தாழ்ந்த ஜாதியிலும் அவதரித்திருப்பதால் அவர்களுள் உயர்ந்த ஜாதியரிடத்தில் தோஷம் சொல்வதாக ஏற்படுமென்பது.

இவற்றுள் முதலாவது தோஷ நிரூபணம் வருமாறு.—காரணகாரியங்களின் * அந்வய உடனிகழ்ச்சி ஞானமும், ‡ வியதிரேக உடனிகழ்ச்சி ஞானமும் காரணத்தன்மையின் நிச்சயத்தை உண்டாக்குகின்றன. அவற்றின் (காரணகாரியங்களின்) § அந்வவியபிசார ஞானமும், ¶ வியதிரேக வியபிசார ஞானமும் காரணத்தன்மையின் நிச்சயத்தைப் பாதிக்கின்றன; என்பது நியாயநூலின் துணிபு. இவ்விடத்தில் ப்ராஹ்மண்யம் காரணமும், அஹங்காரம் அதன்காரியமுமாம். ப்ராஹ்மண்யமாகிய காரணம் சில பெரியோர்களிடத்திலிருந்தும் அதன் காரியமாகிய அஹங்காரம் உண்டாக

---

* அந்வய உடனிகழ்ச்சி ஞானமாவது-காரணமுள்ள விடத்தில் காரியமுண்டு என்னும் ஞானம்.

‡ வியதிரேக உடனிகழ்ச்சி ஞானமாவது-காரணமில்லாதவிடத்தில் காரியமில்லை யென்னும் ஞானம்.

§ அந்வய வியபிசார ஞானமாவது-காரணமுள்ளவிடத்துக்காரியமில்லை யென்னும் ஞானம்.

¶ வியதிரேக வியபிசார ஞானமாவது-காரணமில்லாதவிடத்துக் காரியமுண்டு என்னும் ஞானம்.

வில்லை. ப்ராஹ்மணரல்லாதார் சிலரிடத்தில் ப்ராஹ்மண்யமாகிய காரணமில்லாதிருந்தும், காரியமாகிய அஹங்கார முண்டாகிறது. இதனால் ப்ராஹ்மண்ய அஹங்காரங்களாகிய காரணகாரியங்கட்கு வியபிசார தோஷமேற்படுவதால் ப்ராஹ்மண்யம் அஹங்காரத்தின் காரணமாகாதென்பதாம்.

இனி, இதற்குச் சமாதானம் வருமாறு.— சில பெரியோர்களிடத்தில் ப்ராஹ்மண்யமாகிய காரணமிருந்தும், அஹங்காரமாகிய காரியமுண்டாகவில்லையென்று அந்வய வியபிசாரதோஷங் கூறப்பட்டது. அது ஸம்பவியாது. ஏனென்றால்; ஒருகாரியத்தைக் குறித்து எத்தனை காரண சாமக்கிரியைகள் அங்கீகரிக்கப்படுகின்றனவோ, அத்தனை காரண சாமக்கிரியைகளும் ஒருங்கு கூடிய விடத்துக் காரியத்தின் உற்பத்திஸம்பவிக்கின்றது. அதுவருமாறு.— நூல் ஆடையைக்குறித்துக் காரணமென்று பலரும் ஆக்ஷேபனையின்றி ஒப்புக்கொண்டிருப்பினும், அந்நூலிருக்கின்ற வியாபார ஸ்தல முதலியவிடங்களில் ஆடையின் உற்பத்தி ஸம்பவிப்பதில்லை. இதனால் நூலில் அந்வய வியபிசாரதோஷத்தைக் கற்பிப்பார் ஒருவருமில்லை. ஏனென்றால் அந்தநூலாகிய காரணமிருப்பினும் தண்டசக்ர முதலிய இதர காரணசாமக்கிரியையின் அபாவத்தால் ஆடையின் உற்பத்தி ஸம்பவிக்கவில்லை. அதுபோல இவ்விடத்திலும் ப்ராஹ்மண்யமாகிய காரணமிருப்பினும், அதன்கணுள்ள அபிமானம் ஸ்வரூப யாதாத்ம்யஜ்ஞானத்தின் அபாவ முதலிய இதரகாரண ஸாமக்கிரியையின் அபாவத்தால் அஹங்காரமாகிய காரியத்தின் உற்பத்தி ஸம்பவிக்கவில்லை. இதனால் அந்வய வியபிசாரதோஷத்தைக்கற்பிப்பது முற்றும் பொருந்தாது. ஸ்வரூப யாதாத்ம்யஜ்ஞானத்தில் நிலைபெற்றுள்ள பெரியோர்களிடத்தில் ப்ராஹ்மண்யமிருப்பினும், அது அவர்கள் § விருப்பத்திற்கு விஷயமாயிருக்கவில்லை. எங்ஙனம் * ஈசுவரனிடத்தில் பரத்வாதி குணங்களும், வாத்ஸல்

---

* "பற்றிலன் ஈசனும்" என்ற பாசுர வியாக்யானத்தில் பற்றிலன் ஈசன் என்னும் பதங்கட்கு அன்பே மிகுதியாகவுடையவனென்றும், ஈசுவரத்வம் கழற்றவொண்ணாமையாலே கிடக்கிறதென்றும் நம்பிள்ளையருளிச் செய்ததும் இங்கறியத்தக்கது.

யாதி குணங்களுமிருக்கச்செய்தே வாத்ஸல்யாதி குணங்களேயிருந்தும், பரத்வாதிகுணங்கள் நீக்கவொண்ணாமையால் கிடந்ததுபோல உத்கிருஷ்ட வர்ணத்தில் அவதரித்தவர்களாகிய * ஸ்ரீ தொண்டரடிப்பொடியாழ்வார் முதலிய பெரியோர்களிடத்தில் ஸ்வரூபயாதாத்ம்யஜ்ஞானமே நிலைபெற்று ஜந்மாதி உத்கிருஷ்டங்கள் நீக்கவொண்ணாமையால் கிடந்ததென்று கொள்ளத்தக்கது. இதுவரை அந்வய வியபிசார தோஷமில்லை யென்பது கூறப்பட்டது.

இனி, வியதிரேக வியபிசார தோஷமுமில்லை யென்பதுரைக்கப்படும். அஃதாவது— அஹங்காரத்தின் காரணம் பலவுள்ளன. அவை ஜாதி, ஜ்ஞானம், ஒழுக்கம், பொருள் முதலியனவாம். அவற்றாலுண்டாகிய அஹங்காரங்களும் நான் ஜாதியாலுயர்ந்தவன்; நான் ஜ்ஞானத்தாலுயர்ந்தவன்; நான் ஒழுக்கத்தாலுயர்ந்தவன்; நான் பொருளாலுயர்ந்தவனென்னும் ஜ்ஞானரூபமாய்த் தோற்றும். எங்ஙனம் செங்குடம் கருங்குடங்களின் ஒன்றற்கொன்றுள்ள பேதம் அவற்றின் காரணங்களாகிய செம்மை கருமை கபாலங்களின் பேதத்தால் பிரவசித்தமோ அங்ஙனமே ஜாதிஜ்ஞானாசார முதலிய காரணங்களின் பேதத்தால அவற்றின் காரியங்களாகிய அஹங்காரங்களின் ஒன்றற்கொன்றுள்ள பேதமும் ப்ரவசித்தமாம். நூலாசிரியர் "அதுதானே இழவுக்குறுப்பாகில்" என்று முற்கூறிய ப்ராஹ்மண்யத்தைச் சுட்டியதால் இவ்விடத்தில் இவருக்கு ஜாதியினடியாகவுண்டாகும் அஹங்காரமே தாத்பர்யம். இதனால் பிராம்ணரல்லாதாரிடத்தில் பிராஹ்மண்யமாகிய காரணமில்லாதிருந்தும், அஹங்காரமாகிய காரியமுண்டாகின்றது என்று கூறப்பட்ட வியதிரேக வியபிசார தோஷமும ஸம்பவியாது. ஏனெனின்; எங்ஙன

---

* ஸ்ரீ தொண்டரடிப்பொடியாழ்வார் "குளித்துமூன்றனலை யோம்பும் குறிகொளந்தணமை தன்னை, ஒளித்திட்டேன்" என்றுதமக்கு இயல்பாகப்பிராஹ்மண்ய மிருக்கச்செய்தேயும், அது தமது விருப்பத்திற்கு விஷயமில்லாமையாலே "ஒளித்திட்டேன்" என்றருளிச்செய்ததும் இங்கறியத்தக்கது. இஃதன்றி, விப்ரநாராயணர் என்று பெயர்பூண்டஇவர் விப்ரத்வததில் வெறுப்புற்று,தொண்டரடிப்பொடியென்று பெயரேற்று கொண்டனர் போலும். பெரியாழ்வாரும், ஆண்டாளும் கோபஜர்மத்தை ஏறிட்டுக்கொண்டார் என்பதும் காண்க.

ம் ப்ராஹ்மண்யமாகிய காரணமின்றே, அங்ஙனமே 'நான் ஜாதியா லுயர்ந்தவன்' என்னும் ஜாதியினடியாக வுண்டாகும் அஹங்கார முமில்லை. இதனல் வியதிரேக வியபிசார தோஷமுமில்லை யென்பது ரைக்கப்பட்டது.

இனி, இரண்டாவது தோஷத்தின் பரிகாரமுரைக்கபடும். அஃதாவது ஜன்ம நிருபணம் மிகவும் குரூரமான பாகவதாபசாரம் என்று அருளிச்செய்தஇவர்தாமேபிராஹ்மண்யம் அஹங்காரஹே து என்று அருளிச்செய்வது ஜன்மநிரூபணமாகிய பாகவீதாபசா ரமாகு மென்பதாம். இத்தோஷமும் ஸம்பவியாது. ஏனெனின்; "அதிலே ஒன்று அவர்கள் பக்கல் ஜன்மநிரூபணம்" என்று ஜன் மநிரூபணத்தின் ஸ்வரூபம் நூலாசிரியரால் அருளிச்செய்யப்பட் டது. இவ்வாக்கியத்திற்கு மணவாளமாமுனிகள் வியாக்கியானத் தில் "இழிந்தகுலத்தில் அவதரித்த பாகவதர்களைக் கண்டால் பக வத்ஸம்பந்தமடியாக வந்த அவர்களுடைய பெருமையைப பாரா தே, புல்லறிவால் அவர்களுடைய ஜந்மமாத்திரத்தைக் கொண்டு தாழ்வாக நினைக்கை" என்று அருளிச்செய்திருக்கின்றார். இவ்வி டத்தில் நினைப்பதற்கு கர்த்தா வாக்கியத்தில் இன்மையால் ஜன்மா தி களாலுயர்ந்தவர்கள் நினைக்கை யென்று கர்த்தாவை வருவித்து வாக்யத்தை முடித்துக்கொள்க. ஜன்மாதிகளால் இழிந்தவர்கள் தம் மோடொத்தவர்களை இழிவாக நினைப்பதற்கு ப்ரசக்தியின்மையால் நினைக்கை யென்னும் வினைக்கு ஜன்மாதிகளாலுயர்ந்தவர்கள் என் னும் எழுவாய் வருவித் துரைக்கப் பட்டது. இதனல் ஜன்மாதிக ளாலுயர்ந்தவர்கள் அவற்றால் இழிந்தவர்களை அவை காரணமாகத் தாழ்வாக நினைப்பது ஜன்மநிரூபணவடிவ பாகவதாப சாரத்தின் ஸ்வரூபம் என்று ஏற்படுகிறது. இப்படிபபட்ட கொடிய பாகவதா பசாரத்திற்குக் காரணம் அவர்களிடத்திலுள்ள ஜன்மாதிகளின் உயர்வென்று காரணத்தின் ஸ்வரூபத்தை நிரூபிப்பதும் ஜன்மநிரூ பணவடிவ பாகவதாபசாரமென்று கூறுவது முற்றும் பொருந்தா து. ஜன்மாதிகளாலுயர்ந்தவர்களும் பகவத்விஷயத்தை இழக்காமல் அதன் பிரதிபந்தகங்களை தெரிந்து விலக்கி உஜ்ஜீவிக்கவேண்டுமென் று பரம கிருபையோடு லோகதேசிகன் அருளிச்செய்த இவ்விஷ

யத்தைக் கொண்டே ஜன்மநிரூபணவடிவ பாகவதாபசாரத்தைச் செய்தவராவார் என்று அவர்கள் கூறுவது நம்வாயாற் சொல்லத் தக்கதன்று.

(முன் சஞ்சிகையில் இந்தவியாசத் தொடர்ச்சி 244 ம் பக்கத்திற் பதிப்பிக்க வேண்டியதைத் தவறாக 247 ம் பக்கத்திற் பதிப்பிக்கலாயிற்று. கண்டுகொள்க.)

இராகவராமாநுஜதாஸர்
மதுரை

ஈட்டிற்கண்ட ஐதிஹ்யம்.

(247 ம் பக்கத்தொடர்ச்சி.)

௯-ம் திருவாய்மொழி-செய்யதாமரை.
௮-ம் பாட்டு-துயரமே.

(35) பட்டர் ராமாவதாரத்தில பக்ஷபாதத்தாலே அருளிச் செய்யுமது கேட்கைக்காக, சிறியாத்தான் 'பெருமாளுக்கெல்லா வேற்றங்களும் அருளிச்செய்ததேயாகிலும், பாண்டவர்களுக்காகக் கழுத்திலே ஓலை கட்டித் தூதுபோன கிருஷ்ணனுடைய நீர்மை யில்லையே சக்கரவர்த்தித்திருமகனுக்கு' என்ன, 'அதுவோ, பெருமாள் தூதுபோகாமையன்றுகாண்; இக்ஷ்வாகு வம்சியரைத் தூது போகவிடுவாரில்லாமைகாண்; என்றருளிச் செய்தார். "அவ்வவதாரத்தின் இழவுதீருகைக்காகவிறே கிருஷ்ணனாயவதரித்துத் தூது போயிற்று. "அவனை பின்னோர் தூதாதி மன்னர்க்காகிப் பெருநிலத்தாரின்னார் தூதனென நின்றா"னிறே; பாரதந்த்ர்யராயநுபவிக்

(35) "தயரதற்கு மகன்றன்னையன்றி மற்றிலேன் தஞ்சமாகவே" என்ற விடத்தில் இஃதுரைக்கப் பெற்றுளது. "மற்றிலேன் தஞ்சமாகவே" என்பதற்குப் பட்டர் வியாக்யானஞ் செய்து வருகிறபோது, நஞ்சீயர் "ஞானப்பிரானை யல்லாலில்லை நான் கண்ட நல்லதுவே" என்றும், "கண்ணனல்லாலில்லை கண்டீர்" என்றும் ஆழ்வார் புக்கபுக்கவிடமெல்லாம் இப்படியே சொல்லுவர்; இவர்க்கிது பணியிறே என்றனர். பட்டர், இவர் மற்றோரிடத்தில் தலை நீட்டுவது பாவநத்வத்தைப்பற்ற. இவர் தஞ்சமாக நினைத்திருப்பது சக்கிரவர்த்தித் திருமகனையே' என்றருளிச்செய்தார்.

கைக்காகப் போந்தபின் இதிலொன்று குறைந்ததாகிறது என்றிருக்குமே. எம்பெருமானார் திருவாராதனம் பண்ணிப்போருவதொரு பிள்ளையிறே; இங்ஙனேயிருக்கச்செய்தே ஒரு நாள் ஒரு ஸ்ரீவைஷ்ணவர் சக்ரவர்த்தித் திருமகனை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு வந்து கொடுத்தாராய், அவரைப்பார்த்து இந்த "மாமேகம் சரணம்வ்ரஜ" என்று தேவையிடாதார் எழுந்தருளினர் என்றாராம். ஆபிமுக்கியந்தானும் பரமபக்தியோபாதி யரிதாயிருக்குமிறே இச்சேதனனைப் பார்த்தால். 'இத்தலையில் ஆபிமுக்யத்துக்கு மேற்பட

மேலும் இராமாவதாரத்தில் பட்டருக்கு மிகவும் ஈடுபாடுண்டென்பதைத் தெளிவாகக் கேட்டறிய வேணுமென்ற அவாவினால் சிறியாத்தான் என்ற ஸ்வாமியானவர் பட்டரை நோக்கிவினவினரென்க. அவ்வவதாரத்தி லிழவு தீருகைக்காக என்றது இராமபிரான், 'நாம் அவதரிப்பது அன்பர்களின் இடுக்கணையகற்றுவதற்காகவன்றோ! அது செய்யாமல் அநுமானை தூதனுப்பினோமே; அவன் படாதபாடு பட்டானே' என்ற திருவுள்ளக்குறைவு ஒழிவதற்காக என்றவாறு இருஷ்ணனாயவதரித்துத் தூதுபோயிற்று என்றது அப்பொழுதுள்ள திருவுள்ளக் குறைவு தீருவதற்காகக் கண்ணனாயவதரித்துத் தூது சென்றான் என்றவாறு.

> " முன்னோர் தூதுவானரத்தின்வாயில்மொழிந்துஅரக்கன்
> மன்னூர்தன்னைவாளியினால்மாளமுனிந்துஅவனே
> பின்னோர்தூதுஆதிமன்னர்க்காகிப்பெருநிலத்தார்
> இன்னார்தூதனெனநின்றான் . "

என்பதனை இதற்குப் பிரமாணமாகக்கொள்க. எம்பெருமானாருக்கும் இராமாவதாரத்தில் ஈடுபாடுண்டென்பதை "எம்பெருமானார் திருவாராதனம் பண்ணிப்போருவதொரு பிள்ளையிறே" என்பது முதலிய வாக்யங்களால் விளக்குகிறார். பிள்ளை யென்றது இங்கு வெண்ணெய்க்காடும் பிள்ளையை. [வெண்ணெய்க்காடும் பிள்ளை - கிருஷ்ணன்] "மாமேகம் சரணம் வ்ரஜ" என்று தேவையிடாதார் என்றது கண்ணன் சரமசலோகத்தில் என்னை ஒருவனையே உபாயமாகப்பற்று என்று விதித்தனன். அதுபோல் விதியாதவராகிய சக்ரவர்த்தித் திருமகன என்றவாறு சக்ரவர்த்தித் திருமகன் "மித்ரபாவேந" என்று வெளித்தோற்றத்தில் மாத்திரம் நண்பனாயிருந்தால் போதுமானது; அவ்வாறிருப்பவனை நான் ஒருபோதும் கைவிடமாட்டேனென்றனர். "மாமேகம் சரணம் வ்ரஜ"என்பது சரணம் புகுமவனது தடை

வேண்டா' என்று சொல்லுகிறவை யெல்லாம் சரண்யனுடைய நீர்மையைப் பற்றச் சொல்லுகிறது; இவனுக்கு வேண்டுவது சொல்லப்புக்கால் 'மஹாவிச்வாஸ பூர்வகம' என்னவேண்டும்படியா யிருக்குமிறே. ஒரு சிறுயை விசுவசித்து ஆறு மாதத்திற்கு வேண்ண்டும் சோறும் தண்ணீரும் ஏற்றிக்கொண்டு கடலிலே இழியா

செய்யாமையின் சூசகமன்றே! அங்ஙனமிருக்க இதனைத் தேவையென்னலாமோவென்னில்; இதனை விளக்குகிறார் "ஆபிமுக்யத்தாலே பெறலாமென்றால்." என்பது முதலிய வாக்கியங்களால். ஆபிமுக்யததாலே பெறலாமென்றால் என்றது ஆபிமுக்யததாலே எம்பெருமானையடையலாமென்றவாறு.[ஆபிமுக்யம்-எதிர்முகமாகை; மனமிசைந்திருக்கை; அநுகூலனாயிருக்கை.] பரபக்தியோபாதி என்றது பரபக்திபோல என்றவாறு. அரிதாயிருக்குமிறே இசசேதனனைப்பார்த்தால் என்றது அநாதிகாலம் துர்வாசனையிலே பொழுதுபோக்கிப்போந்த இந்தச்சேதனன் தன்மையை நோக்கினால் பகவத் விஷயத்தில் அநுகூலனாயிருப்பதும் அரிதாயிருக்குமென்றவாறு. 'இத்தலையில் ஆபிமுக்யததுககு மேற்படவேண்டா' என்று சொல்லுகிறவையெல்லாம்என்றது ப்ரபத்தி சாஸ்திரங்களில் எம்பெருமானை யடைவதற்கு ஆபிமுக்யத்திற்கு மேற்பட வேறொன்றும் வேண்டா மென்றுரைத்த இது முதலிய வாக்கியங்களெல்லாம் என்றவாறு- சரண்யனுடைய நீர்மையைப் பற்றச சொல்லுகிறது என்றது எம்பெருமானுடைய ஸௌலப்யத்தை நோக்கி அவன் சுலபனாத்யன் என்று சொல்லியது என்றவாறு. (ஸௌலப்யம்-சுலபனாயிருக்கை.) இதனால் சேதனன் எம்பெருமானைப் பெறுவதற்கு ஆபிமுக்யமாத்திர மிருந்தால் போதாது என்பதுகருத்து. இவனுககு வேண்டுவது சொல்லப்புக்கால் என்றது சேதனனுக்கு வேண்டுவது இன்னதென்றுள்ளவாறுரைக்கலுறின் என்றவாறு. மஹாவிசுவாசபூர்வகம் என்னவேண்டும்படியா யிருக்குமிறே என்றது மஹாவிசுவாச முன்னாக எம்பெருமானைப் பற்றவேண்டு மென்றுரைக்கும்படியா யிருக்குமென்றவாறு. (மஹாவிசுவாஸம்-பெரும் நம்பிக்கை.) ஒருவன் சிறுயை விசுவசித்து என்றது ஒருவன் ஒரு ஓடத்தை நம்பி என்றவாறு. [சிறுய்-மரச்சக்கை.] அல்பதை தோன்றச் சிறுய் என்றார். அசேதனமான ஓடததை நம்பி 'இது நம்மைக்காப்பாற்றும்' என்ற நிச்சயங்கொண்டு சமுத்திரத்திற் பயணஞ் செய்கின்றனர். பரமசேதனனாகிய எம்பெருமானை யடைகிறபோது அவ்வளவாவது விசுவாசம் வேண்டாமோ? என்பது குறிப்பு. இத்தக் குறிப்புப்பொருளை விளக்

நின்றான். அவ்வோபாதி விசுவாசமாகிலும் வேண்டாவோ பகவத் விஷயத்தைப் பற்றுவார்களுக்கு என்று அருளிச்செய்வர்.

எ-ம் திருவாய்மொழி-பயிலஞ் சுடரொளி.

உ-ம் பாட்டு-ஆளும்பரமனை.

(36) பட்டர் திருக்கோஷ்டியூரிலே எழுந்தருளியிருக்கச்செய்தே அநந்தாழ்வான் கண்டு பரமபதத்தில் ஸர்வேசுவரன் சதுர்புஜனோ? த்விபுஜனோ எழுந்தருளியிருப்பது' என்ன, ஏகாயநர் த்விபுஜன் என்று நின்றார்கள். நம்முடையவர்கள் சதுர்ப்புஜன் என்றுநின்றார்கள். இரண்டிலும் வழி யேது என்ன, த்விபுஜனுயிருந்தானாகில் பெரியபெருமாளைப்போலே யிருக்கிறது. சதுர்ப்புஜனென்று தோற்றிற்றாகில பெருமாளைப்போலே யிருக்கிறது' என்றருளிச் செய்தார். நம்மளவன்றியே தெரியக் கண்டவர்கள் "கையினார் சுரிசங்கனலாழியர்" என்றார்களிறே பெரியபெருமாளை; இடைப்பெண்களுக்கு நாலாய்த்தோற்றி உகவாத கம்ஸாதிகளுக்கிரண்டாய்த் தோற்றுமாப்போலே; "ஆதியஞ்சோதி யுருவையங்குவைத்திங்குப்பிறந்த" விடத்தும் சதுர்ப்புஜனுயிறே வந்தவதரித்து. "உபஸம்ஹர" என்னசெய்ததிறே மற்றையது. நிலாத்துக்குறிபகவர், பட்டரை 'ஸ்ரீவைகுண்டத்தில் சதுர்ப்புஜனுகிறார்' அவ்வோபாதி விசுவாசமாகிலும் வேண்டாவோ பகவத் விஷயத்தைப் பெறுகைக்கு' என்று. இதனால் மஹா விசுவாசமிருந்தாலன்றி எம்பெருமான் எவரையும் அங்கீகரிக்கமாட்டான் என்பது கருத்து.

(36) "தோளுமோர் நான்குடை" என்ற இடத்தில் இது குறிப்பிடப்பெற்றுளது. சதுர்ப்புஜனோ என்றது நான்கு புஜங்களோடு எழுந்தருளியிருக்கின்றானோ என்றவாறு. த்விபுஜனோ என்றது இரண்டு புஜங்களோடு எழுந்தருளியிருக்கின்றானோ என்றவாறு. ஏகாயநர் —ஏகாயனசாகையை அத்யயனஞ் செய்தவர்கள். இவர்களை மத்வரென்று வழங்குவர். நம்முடையவர்-நம்பூர்வாசாரியர். இரண்டிலும் வழியேது என்றது இந்த (த்விபுஜன் சதுர்ப் புஜன் என்ற) இரண்டு பக்ஷத்தில் பிரமாணம் ஏது என்றவாறு. த்விபுஜனுயிருந்தானாகில பெரியபெருமாளைப்போலே யிருக்கிறதென்றது பெரியபெருமாள் சதுர்ப்புஜராயிருக்கச்செய்தேயும் அறிவிலிக

யிருக்குமென்னுமிடத்துக்குப்ரமாணமுண்டோ' என்ன, "தஸ்ய வரஶோயாதா ஸம்வஸ்த்ரகதாயுத:", தமஸ: பரமோதாதா சங்க சக்ரகதாதர:" என்றுண்டாயிருந்ததே என்ன, உத்தரமில்லாமை யாலே விக்ருதனாக, ப்ரமாணகதியிதுவாயிருந்தது பொறுக்கலாகாதோ' என்றருளிச் செய்தார்.

ளுக்கு இரண்டு புஜங்களையுடையவராகத் தோற்றுகிறதுபோலே பரமபத நாதன் சதுர்ப்புஜனாயிருக்கச்செய்தேயும் அஜ்ஞர்களுக்கு இரண்டுபுஜமுடையனாய்த்தோற்றுவானென்றவாறு. அநந்தாழ்வான் ஜ்ஞான விசேஷ முடைய பெரியாராதலால் அவர் முன்னிலையில் பட்டர் எம்போல்வார்கட்குப் பெரியபெருமாள் சதுர்ப்புஜராகச்சேவை சாதித்து அஜ்ஞர்கட்கு இரண்டு புஜமுடையவராகச் சேவை சாதிப்பதுபோல பரமபதத்திலும் அங்ஙனமே சேவை சாதிக்கின்றானென்று சொல்லுவதற்குக்கூசி த்விபுஜனாயிருந்தானாகில் பெரியபெருமாளைப்போலே யிருக்கிறது; சதுர்புஜனாயிருந்தானாகில் பெருமாளைப்போலேயிருக்கிறது என்றருளிச் செய்தார். பரமபதத்திலும் அஜ்ஞருண்டோவென்னில்; உபாஸநாநுகுணமாக அவரவர்கட்குத் தக்கவாறு பரமபதத்தில் எம்பெருமான் ஸேவைசாதிக்கின்றான். த்விபுஜனாகவுபாஸிப்பார் பூர்ணாதிகாரிகளாகார். பூர்ணாதிகாரிகளை நோக்க இவர்கள் அஜ்ஞரென்று சொல்லப்பட்டதேயன்றி இவ்வுலகிலுள்ள ஜ்ஞாந சூன்யர்களைப் போன்றவரில்லையென்று கொள்ளத்தக்கது. இதனால் அதிகாரிபேதம் பரமபதத்திலுமுண்டென்று கொள்ளவேணடும். கேவலனுக்குப் பரமபதப்ராப்தி யிருந்தும் பகவதனுபவமில்லையன்றோ!

நம்மளவன்றி என்றது நம்போன்ற ஞானத்தளவன்றி என்றவாறு. தெரியக்கண்டவர்கள் என்றது எம்பெருமானுடைய அநுக்ரஹத்தால் அவனது ஸ்வரூபரூபகுண விபூதிகளைத் தெளிவாகக்கண்ட ஆழ்வார்களென்றவாறு. "கையினார் சுரிசங்கனலாழியர்' என்றது திருக்கையில் அழகு நிறையப்பெற்று விளங்குகிற சுழியையுடைய சங்கையும், அனலுமிழ்கின்ற சக்கரத்தையுமுடையவர் என்றவாறு இது; திருப்பாணாழ்வார் பெரிய பெருமாளை நேரேகண்டநுபவித்தபோது அநுசந்தித்த பாசுரம். ஆதியஞ் சோதியுருவை 'யங்குவைத்திங்குப் பிறந்த' என்றது பரமபதத்திலுண்டான ஆதியஞ்சோதியுருவை வைத்துக்கொண்டு இங்குப்பிறந்த என்றவாறு. சதுர்ப்புஜனாயிறே அவதரித்தது என்றதுகண்ணபிரானாக வந்தவதரித்தபோது நான்கு புஜங்களுடையவனாக அவதரித்தான் என்றவாறு. 'உபஸம்ஹர' என்னச்செய்ததிறே மற்றையது என்றது தேவகிப்பிராட்டியாரும் வசு

ஸ்ரீ

மதிப்புரை.

தமிழ்ப்பேரகராதி.—சென்னைச் சர்வகலா சங்கத்தார்கள் பல்லாண்டுகளாக விடா முயற்சியுடன் பலவறிஞரின் துணைகொண்டு பதிப்பித்துவரும் இவ்வகராதியின் நான்காவது தொகுதியின் முதற்பகுதியும், இரண்டாம் பகுதியும் இப்பொழுது வெளியாயிருக்கின்றன. முதற் பகுதியில் 'நீக்காய்தல்' என்னும் சொன் முதல் 'தொப்பைக்காரன்' என்னும் சொல்லிறுதியாகவும், இரண்டாம் பகுதியில் 'தொப்பைக்கூத்தாடி' என்னும் சொன்முதல, 'நியமித்தல' என்னும சொல்லிறுதியாகவும் பலவரிய தமிழ்ச் சொற்கட்குப் பொருளெழுதப்பெற்றுளது. மேலும், இதில் சொற்பொருளும், சொற்கள இன்னின்ன நூல்களிற் பயின்றுள்ளன என்ற விளக்கமும் ஆங்கிலத்திலும தமிழிலும் எழுதப்பெற்றுள்ளன. ஆதலால் இது, ஆங்கிலம் பயின்றோர்கட்கும் தமிழறிஞர்கட்கும பெருந்துணையாயிருக்கும். இப்பணி, இடையீடின்றி நடைபெறவேண்டுமென்பதே முக்ய நோக்கமாகக்கொண்டு பொருள்மிகச் செலவழிவதையும் பொருட்படுத்தாமல நடத்திவரும் அதிகாரிகளின் முயற்சி பெரிதும் போற்றத்தக்கதே. முதற்பகுதியில் 161 பக்கமும், இரண்டாம் பகுதியில 159 பக்கமும் அடங்கியிருக்கின்றன. ஓவவொரு பகுதியின் விலை ரூ. 2—0—0. வேண்டுவோர் கீழ்க்குறிப்பிட்ட விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்க.

The Madras Law journal Office,
Post Box 604 Mylapore, Madras.

பத்திராதிபர்.

தேவரும் சங்கசக்கரதாரனுய்ச் சதுர்புஜங்களோடுஸேவை சாதிப்பதைமறைத்தருளவேண்டும் என்று பிரார்த்தித்தபின் அவற்றை மறைத்து இரண்டு புஜங்களோடு விளங்கினனென்றவாறு.

திலாத்துக்குறிபகவர்–திலாத்துக்குறிஜீயர். [பகவர்–மூக்கோலேந்திய முனிவர். இத்தச்சொல் குணநஷ்டரையுங் குறிக்கும்] தமஸ பரமோ தாதா சங்கசக்ரகதாதர: என்பது இராவணன் மனைவியாகிய மண்டோதரியின் கூற்று. இதன் பொருளாவது–பிரகிருதி மண்டலத்திற்கும் மேலான பரமபதத்தில் வசிப்பவரும், சங்கு சக்கரம் கதைகளை தரிப்பவரும், போஷகருமாகிய எம்பெருமானுர் என்றவாறு. உத்தரம் இல்லாமையாலே விக்ருதனுக என்றது பதிலுரைப்பதற்கியலாமையாலே கோபமுடையவனுக என்றவாறு. பிரமாணகதியிதுவாயிருந்தது பொறுக்கலாகாதோ என்றது ப்ராமாணத்தின்வழி இப்படியிருந்தால் நீர்பொறுத்துக்கொள்ளலாகாதோ என்றவாறு. உம்முடைய கொள்கைக்கு பொருத்தமில்லாதிருந்தாலும் ப்ரமாணபலததை நோக்கி அங்கீகரிக்கவேண்டுமேயன்றி கோபிக்கலாகாதென்பது கருத்து.